Free Circulation Germany- England
மணி: 75 - ஓசை: 342 பங்குனி. March 2025

# வெற்றிமணி

Vettimaniy

ESTD 1950

31 TH years IN EUROPE Successful Publishing

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்.B.F.A

Orientalisch
Textilien & Schmuck
அனைத்து ஆடைகளும்
STOCK CLEARANCE
SALE
UPTO 50% OFF
01.03.2025 முதல் 31.03.2025 வரை
34 ஆவது ஆண்டு நிறைவு
Königswall 16 (Am Hbf)
44137 Dortmund
Tel:0231 162377

# இனி எமக்கு ஆர்.பாரதி





## ஒத்திகை




சர்வதேச பெண்கள் தினச் சிறப்பிதழ்

வெற்றிமணி கௌரவ ஆசிரியர்

கலாபூஷணம்
கிருஷாந்தி இரவீந்திரா

இதழ்: 342

International Women's Day
March 08



அனைவருக்கும் எங்கள் சர்வதேச பெண்கள் தின வாழ்த்துகள்

31 ஆண்டுகளாக தமிழர் இல்லம் எங்கும் ஒலிக்கும் வெற்றிமணி








# தேவையானவர்கள்தானே எடுப்பார்கள்

# பாலியில் சரஸ்வதி பூஜை





● மாதவி

கடற்கரைக்கு குடும்பத்துடன் வந்து கடலில் குளித்து, கடவுளுக்கு, தாம் விரும்பும், உணவுகளை, ஓலைப்பெட்டியில் படைத்து, வழிபட்டனர்.

காலை 7.00 மணிக்கே கடற்கரையில் கூட்டம் அலையெனத் திரண்டது. சிறு சிறு தற்காலிக உணவுக்கடைகளும் உண்டு. ஆயிரக்கணக்கான மக்கள் மோடர்சைக்கிள்களில் வந்து கடற்கரையை நிரப்பினர்.

முதியவர்களை விட இளையவர்கள் அதிகம். ஆங்கிலத்தில் இளையவர்கள் சரளமாகப் பேசினர். கடற்கரை மணலில் படையலில் காசும் வைத்து இருந்தனர். யாருக்கு காசு எனக் கேட்டேன், தேவையானவர்கள்தான் எடுப்பார்கள் என்றனர். சொன்னவர் எனக்கு கடவுள் போல் தெரிந்தார்.

எங்கே இங்கு முதியவர்கள் எவரையும் காணவில்லை. ஏன் என்றேன்.

அவர்கள் எமக்காக அன்று கடவுளை வேண்டினார்கள்.

இன்று நாம் அவர்களுக்காக கடவுளை வேண்டுகின்றோம்.

வாழ்க்கை ஒரு சக்கரம் என்றனர்.


எமக்கு முதியோரையும் அழைத்து சென்றே பழக்கம். அதில் ஒரு சுகம் மனநிறைவு என்றேன்.

முதுமையை ஏற்றுக்கொள்வதும் சுகம் என்றனர்.

உண்மைதான் ஆனால் எனக்குத்தான் முதுமை வரவில்லையே.


என் வீட்டுக்கண்ணாடிக்கு என் மீது 70 வருடமாகத் தீராத காதல். ■







வெற்றிமணி
தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
ஓசை : 342



ஆரம்பம்: 1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன்
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

வெற்றிமணி கௌரவ ஆசிரியர்
கலாபூஷணம்
கிருஷாந்தி இரவீந்திரா

Tel: +49 01631992333
+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி"
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276

# இனி எமக்கு ஆர்.பாரதி

நெருப்பையும்
மென்மையாக
எழுதும் வார்த்தைகள்
அறிந்தவர்.

எதிரிகளை கருத்துக்களால்
மட்டுமே களமாடுபவர்.

சிலர் சிலருக்கு மட்டுமே
நல்லவர்கள்.
இவர் எல்லோருக்கும்
நல்லவர்.
மென்மையானவர்
வல்லவர்
என்பதாலோ!





## இலங்கையிலிருந்து ஆர்.பாரதி

நான் வெற்றிமணி பத்திரிகை அரசியல் கட்டுரை இந்த திகதி வேண்டும் என்று எழுதினால்

OK, சரி என்று பதில் வரும்.

இவரது OK, சரி என்றும் நேரான அர்த்தமே சொல்லும்.

மாசி மாத கட்டுரை சொன்ன திகதியில் இருந்து தை மாதம் 2 தினங்கள் முன் பாகவே அனுப்பி வைத்தீர்கள்.

யாழ்பாணத்தில் இருந்து வெற்றிமணி இம்மாதம் தயாரிப்பதால் எனக்கு சிரமம் வேண்டாம் என்ற பின் குறிப்போடு .

உங்கள் பயண முன் ஏற்பாட்டை

நான் அப்போது அறிந்திருக்கவில்லை.

15.01.2025 திகதி 13.30க்கு தம்பி பாரதியை புகையிர வீதி யாழ்ப்பாணத்தில் வீரகேசரி காரியாலயத்தில் சந்தித்தேன்.

மினிவானில் வந்து புகையிரத கடவை கடந்து, இறங்கி, வீரகேசரி காரியாலயம் தேடி நடந்தேன்.

பாரதியின் அழைப்பு வந்தது.

நான் இறங்கி வந்தபடி உள்ளேன் என் றேன்.

அவர் முகம் நான் காணும் வரை எனக்கு வரும்பாதை சொல்லும் ஒரு வழிகாட்டியா-னார்.

தெருவீதிக்கு மட்டுமல்ல ஊடக வீதிக்கும்தான்.

வெற்றி மணி 30 வது ஆண்டு நிறைவு

யாழ்ப்பாணத்தில் பருத்தித்துறை நகரில் நடத்தியபோது அவரே தலைமை தாங்க வேண்டும் என்றேன்.

மகிழ்வான தருணம் ஆக்கினார்.

21ம் திகதி தலையில் இரத்தகசிவு ஏற்பட்டு யாழ்ப்பாணம் போதனா சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

22ம் திகதி நான் கொழும்பு விமான நிலையம் செல்லவேண்டும். அதற்கு இடையில் அவரைச் சென்று பார்த்தேன்.

அவசரப்பிரிவில் இருந்து 7ம் இலக்க வாட்டில் 26 இலக்க கட்டிலுக்கு மாற்றப்பட்டு இருந்தார்.

கண்களை விழித்து பார்த்தார், என்னை யார் எனக் கண்டுகொண்டார். பேசவில்லை

கண்கள் பேசின, அவர் கரம் தொட்டு விடைபெற்றேன். (09.02.2025) அவர் விடைபெற்றுவிட்டார்.



**வெற்றிமணியின் மூன்றாம் பக்கம் அரசியல் களம்.**

**இலங்கையில் இருந்து ஆர். பாரதி என இருக்கும்.**

**இனி எனக்கு ஆர். பாரதி. சொல்லடா தம்பி பாரதி. உன்னைத்தேடும்**

**வெற்றிமணி மு.க.சு.சிவகுமாரன்**












## திருக்குறள் வளாகம் யாழ்ப்பாணத்தில் அமைந்ததால்

# யாழ்.,மண்ணுக்கும் பெருமை





”வள்ளுவர் பிறந்தமையால் தமிழ் நாட்டுக்கு எவ்வாறு பெருமையோ அதே போல திருக்குறள் வளாகம் யாழ்ப்பாணத்தில் அமைந்ததால் யாழ்ப்பாண மண்ணுக்கும் பெருமை” என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

மாவிட்டபுரத்தில் ஞாயிற்றுக்கிழமை (02.02.2025) திறந்து வைக்க ப்பட்ட சிவபூமி திருக்குறள் வளாகத்தின் மாலை நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக ஆளுநர் கலந்துகொண்டார்.

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெற்ற மாலை நிகழ்வில், யாழ்ப்பாண மாவட்டச் செயலர் ம.பிரதீபன், முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன், மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன், வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், தமிழ்த்துறை பீடாதிபதி விசாகரூபன் ஆகியோர் பங்கேற்றனர்.

ஆளுநர் தனது பிரதம விருந்தினர் உரையில், ஏனையோரால் நினைத்துப்பார்க்க முடியாத விடயங்களை ஆறு.திருமுருகன் அவர்கள் சாதித்து வருவதாக புகழாரம் சூட்டினார். தமிழுக்கும், சைவத்துக்கும் அவர் தனது வாழ்வையே அர்ப்பணித்து அரும்பணியாற்றி வருகின்றார் என்று குறிப்பிட்டார். ஏனைய ஆலயங்களுக்கு முன்மாதிரியாக சமூகப்பணிகளை அவர் முன்னெடுத்து வருகின்றார் எனக் குறிப்பிட்ட ஆளுநர் அதை ஏனைய ஆலயங்களும் பின்பற்றவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இன்று பலர் கொடையளிக்க தயாராக இருந்தாலும் நிதி மீதான வெளிப்படைத்தன்மை இன்மையால் தயங்குகின்றனர் எனத் தெரிவித்த ஆளுநர், ஆறு.திருமுருகன் மீது கொண்ட நம்பிக்கையால்தான் பலர் நிதி கொடுக்கின்றனர் எனவும் குறிப்பிட்டார்.

திருக்குறள் தமிழர்களுக்கு பெருமை எனச் சுட்டிக்காட்டிய ஆளுநர், எந்தக் காலத்



துக்கும் பொருந்தக் கூடிய நூலாக திருக்குறள் அமைந்திருப்பதைக் குறிப்பிட்டார். எந்தமொழி பேசுவோரும், எந்த மதத்தைப் பின்பற்றுவோரும் திருக்குறளை படிக்க முடியும் எனத் தெரிவித்த ஆளுநர், திருவள்ளுவர் தமிழராகப் பிறந்தமை எங்களுக்கும் பெருமை எனச் சுட்டிக் காட்டினார்.





# சமூக வலைத்தளமும் நமது வெற்றியும்

புதுவருடம் பிறந்தாயிற்று, ஆளாளுக்கு சபதங்களையும் இலட்சியங்களையும் அள்ளிக் கட்டிக்கொண்டு புதிய வருடத்திற்குள் நுழைந்திருப்போம் . போதாக்குறைக்கு நாம் என்னவெல்லாம் இலட்சியங்களை அடையப்போகிறோம் என்பதனை நோகாமல் சமூக வலைத்தளங்களிலும் பதிவிட்டிருப்போம். ஆனால்? உண்மையிலேயே வருடம் பிறக்கும்போது ஒன்றை செய்யவேண்டும் என நம்மிடம் இருக்கும் உத்வேகம் , அடுத்தடுத்துவரும் சில மாதங்களிலேயே காணாமல்போகும் வழக்கம் நம்மில் பலரிடமும் உண்டு. ஏன் இப்படி ? இதற்கான முதல் காரணம் எதுவாக இருந்தாலும் முக்கிய காரணம் நாம் என்ன செய்யப்போகிறோம் என்பதை செய்து முடிப்பதற்கு முன்பே சமூக வலைத் தளங்களில் பதிவிடுவதுதான் என்றால் அதுதான் உண்மை . ஏனெனில் , “ இந்த வருடத்தில் நான் இதை சாதிக்கப்போகிறேன் “ என நாம் பதிவிடும் பதிவுகளுக்கு வரும் வாழ்த்துக்களும் , லைக்குகளும், கமெண்டுக்களும் குறிப்பிட்ட அந்த எல்லைக்குள்ளேயே நம்மை திருப்தியடைய வைத்துவிடும் என்பதுதான் உளவியல் . சத்தமில்லாமல் சாதித்துவிட்டு வெற்றியை பதிவிடுவதென்பது வேறு , ஒன்றை செய்து முடிப்பதற்கு முன்பே அதனை டமாரம் அடித்து ஊருக்கே சொல்லிவைப்பதுபோல், சமூக வலைத்தளங்களில் பதிவிடுவதென்பது நம்மை வளரவிடாமல் செய்யும் ஒன்று.



பிரியா இராமநாதன் (இலங்கை)

உண்மையில் இதுமட்டுமல்ல நம் பிரச்சினை , நாம் போடும் பதிவுகளு க்கும் என்னென்ன வினையாற்றல்கள் வந்திருக்கின்றன என்பதை அடிக்கடி சென்று பார்த்துக்கொண்டிருப்பது,அதற்கு பதிலிட்டுக்கொண்டிருப்பது, மற்றவர்கள் சமூக வலைத்தளங்களில் என்னவெல்லாம் செய்துகொண்டிருக்கிறார்கள் என விடுப்பு பார்ப்பது என எல்லாமே நமக்கான நேர விரயம்தான் . இப்படி நேரத்தை சமூக வலைத்தளங்களில் விரயமாக்கிக் கொண்டிருந்தால் நாம் நமக்கான இலட்சியங்களை நிறைவேற்ற நேரமேது? போதாக்குறைக்கு மற்றவர்களது பதிவுகளை பார்த்து “அடடே அவர்கள் கார் வாங்கியிருக்கிறார்கள்,வீடு வாங்கியிருக்கிறார்கள் , விடுமுறையை கழிப்பதற்கு வெவ்வேறு நாடுகளுக்கு சென்றிருக்கிறார்கள், கணவன் மனைவி குழந்தைகள் என எப்படியெல்லாம் அன்போடு பின்னிப்பிணைந்திருக்கிறார்கள், நமக்கு மட்டும் ஏன் இதெல்லாம் அமையவே மாட்டேங்குது? நாம் ஏன் இப்படி இருந்து தொலைக்கின்றோம்?“ என மனஉளைச்சல்களுக்கு வேறு ஆளாவோம்! உண்மையில் சமூக வலைத் தளங்களில் மிகவும் சந்தோஷமாக தம்மை காட்டிக்கொள்ளும் அனைவருமே அப்படிதான இருக்கின்றார்களா ?

என்றால் இல்லை என்பதே யதார்த்தம்! இந்த உலகம் தன்னிடம் இல்லா தவற்றையும் இருப்பதாக காட்டிக்கொள்ள தற்போது பயன்படுத்தும் ஒன்றாகவே சமூகவலைத்தளங்கள் மாறியிருக்கின்றன என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் . நானறிய கீரியும் பாம்பும்



போல அடித்துக்கொள்ளும் பல தம்பதிகள் , அன்றுதான் திருமணம் முடித்து வந்த புதுமானத் தம்பதிகள்போல் புகைப் படங்களை பகிர்வது , தம்மிடம் இல்லாத ஒன்றை இருப்பதாக காட்டிக்கொண்டு புகைப்படங்களை பகிர்வது , தம்மை ஓர் மிகப்பெரிய திறமைசாலியாக சித்தரித்து பதிவுகளை போடுவது என பலவற்றை நான் அவதானித்ததுண்டு . இவர்களெல்லாம் “ attention seekers “ என்கிற கேட்டகரிக்குள் அடங்குபவர்கள் ! தங்களின் இயல்பான வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளை , புகைப்படம் , குறும்படம் மூலம் பகிர்ந்துக்கொள்ளுதல் என்பது ஏற்றுகொள்ளகூடியதாக இருந்தாலும், அதைவிட அதிகமாக தன் நிலைமைக்கு மீறிய இயல்புவாழ்கைக்கு புறம்பான ஒரு பெருமையான உலகை காண்பிக்கும் வகையிலேயே தகவல்கள் பதியப்படுகின்றது என்கிற நிதர்சனம் புரியாமல் , பலரும் ஐயோ நமக்கு அப்படியான வாழ்வில்லையே என ஆதங்கப்படுகின்றோம்.

மின்னஞ்சல் முகவரி வைத்திருப்பதேயே பெரிதாக கருதும் இன்றையச் சூழலில் தற்போது சமூக வலைதளங்களில் கணக்கு இல்லாதவர்கள் அற்ப்பமாக பார்க்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. பேஸ்புக், டிவிட்டர், ஆர்குட், டிவிட்டர், யூடியூப் ஆகியவற்றில் கணக்கு இல்லாதவர்களை எள்ளி நகையாடுகின்றனர். இத்தகைய சமூக மாற்றங்கள சமூக வலைதளங்கள் ஏற்படுத்தியுள்ளன.நேரம் கிடைக்கும் போதெல்லாம் இணையத்தைப் பயன்படுத்தும் நிலைமாறி இணையத்திலேயே நேரத்தைக் கழிக்கின்ற நிலை உருவெடுத்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

சமூகவலைத்தளங்கள் என்பவை இன்றெல்லாம் மிகப்பெரிய நன்மைகளை கொண்டுவந்து சேர்க்கும் மிகப்பெரிய ஊடகங்கள். எத்தனையோ வீட்டிலிருக்கும் பெண்கள் லழரவரடிநஇல் கற்றுக்கொடுக்கப்படும் கைவினைப்பொருட்களை பார் த்தேதாமும் செலவில்லாமல் கற்றுக் கொண்டு அவற்றை பொருளீட்டும் வழிமுறையாக பயன்படுத்திக் கொள்கிறார்கள், தொழில் முனைபவர்கள், பேஷன் துறை சம்பந்தப்பட்டவர்கள் தம்மை வளர் த்துக் கொள்ளவும்,பொருளீட்டவும் சமூக வலைத்தளங்களை பயன்படுத்திக் கொள்கிறார்கள் . கல்வி சம்பந்தப்பட்ட நிறைய விடயங்கள் , வீட்டு பராமரிப்பு முறைகள், விற்பனை முறைகள் என ஏராளமாய் இந்த சமூக வலைத் தளங்கள் நமக்கு இலகுவாக கற்றுக் கொடுக்கும்போது அவற்றை நமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு நாமும் முன்னேறி சமூகத்தையும் முன்னேற்றுவதைவிடுத்து, நாம் வெறும் நுகர்வோர்ககவும்,பார்வையாளர்களாகவுமே சமூகவலைத் தளத்தில் இருப்பதுதான் சாபக்கேடு !

சமூக வலைத்தளங்கள் சர்வதேச அளவில் மிகப்பெரிய அரசியல் மாற்றங்களையும் உருவாக்கும் சக்தி கொண்டதாகத் திகழ்கின்றன.

28 ஆம் பக்கம் பார்க்க...




HAPPY WOMEN'S DAY
2025
HAPPY NEW YEAR
Luckyfly
SRI LANKA
Summer 2025
DREAM VACATION
AB 1080 €
0234 2399032
0179 14 84892
info@lucky-fly.de | www.lucky-fly.de
BOOK NOW

# இராமநாதன் நுண்கலைக்கழக நடனத்துறை வளர்ச்சியின் முக்கிய கால கட்டங்களில் கலாபூஷணம் கிருசாந்தி இரவீந்திரா அவர்களின் பங்களிப்பு!

வருடா வருடம் பங்குனி 08 பெண்கள் தினத்தை முன்னிட்டு வெற்றிமணிப் பத்திரிகை ஒரு சாதனையாளரை கௌரவ ஆசிரியராக கௌரம் செய்து வருகின்றது. அந்த கையில் 50 வருடங்களுக்கு மேலாக கலைச் சேவை புரியும் கலாபூஷணம் கிருஷாந்தி இரவீந்திரா அவர்களைக் கௌரவிப்பதில் வெற்றிமணி பெருமிதம் அடைகிறது.

**பரதக் கலை மீதான ஆர்வ ஈடுபாட்டினையும் குருவாக அமைந்தவரையும் கூற முடியுமா?**



ஆடற்கலை மீதான ஆர்வமும் ஈடுபாடும் என்னுடைய குழந்தைப் பருவத்திலே இயல்பாகவே வெளிப்பட்டதனை எனது பெற்றோர்கள் கூறிப் பெருமைப்படுவதனை அறிந்துள்ளேன். திருமண வைபவங்களின் போதும், நாதஸ்வர தவில் கச்சேரிகள் நடைபெறும் வேளைகளிலும் நான் எனைமறந்து இயல்பாகவே நடனம் புரிவதாக உறவினர்கள் சொல்லக் கேட்டிருக்கின்றேன். இத்தகைய எனது அதீத நடன ஆர்வ வெளிப்பாட்டை உணர்ந்த தந்தையார் சேனாதிராஜா அவர்களே எனக்கு ஆரம்ப குருவாக நடனம் பயிற்றுவிக்க ஆரம்பித்தார்.

தந்தையார் திரு.இராஜா சேனாதிராஜா அவர்கள் கணக்கியல்துறை சார்ந்தவராய் இருந்தாலும் ஆடற்கலை நடிப்புத்திறன் என்பவற்றில் நாட்டம் மிகுந்தவர். நல்லை ஆதீன ஸ்தாபகர் முதற் குருமணி தம்பிரான் சுவாமிகள் என்ற மணிஐயரிடம் நடனம் பயின்றவர். 1942ம் ஆண்டில் அவர் ஆடிய சிவதாண்டவம் மறக்க முடியாத நிகழ்வு என அன்றைய கலைஞர் பெருமக்களால் பாராட்டப்பெற்ற நடனக் கலைஞர். இவ்வாறு ஐந்து வயதினிலேயே தந்தையிடம் ஆரம்பித்த ஆடற்கலை பயில்வு தான் தொடர்ந்து வந்த வளர்ச்சிக்கும் ஈடுபாட்டிற்கும் வித்திட்டது. சிறந்த நாட்டிய குருமூலம் பரதக்கலையை எனக்கு முறையாகப் பயிற்றுவிக்க எண்ணி அன்றைய நாட்களில் பிரசித்தி பெற்ற கொக்குவில் கலாபவனம் நாட்டிய குரு கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையாவிடம் நடனம் பயில ஏற்பாடு செய்தார்கள்.

அன்றிலிருந்து கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையா அவர்களின் மாணவியாக இலங்கையின் பல பாகங்களிலும் கலாபவனம் ஆற்றுகை செய்த நாட்டிய நிகழ்வுகளில் எல்லாம் பங்குபற்றி குருவின் நாட்டிய வழிகாட்டல், பயிற்றுவிப்புத் திறன், கண்டிப்பு, தொடர்பயிற்சி மற்றும் ஒரு தந்தை போன்ற அக்கறையுடனான ஆதரவு என்பவற்றினால் புடம்போடப் பெற்று 1970களில் எனது பரதநாட்டிய அரங்கேற்றமும் மிக விமரிசையாக இடம்பெற்றது.



**பங்குனி 08 பெண்கள் தின வெற்றிமணி சிறப்பிதழ் கௌரவ ஆசிரியர் கலாபூஷணம் கிருசாந்தி இரவீந்திரா**



நாட்டியத்தில் மேலும் தகைமைகள் பெற்று என்னை பரதநாட்டிய வல்லுனராக்க வேண்டும் என்ற பெற்றோரின் தாகமும், பரதக்கலையின்பால் நான் கொண்டிருந்த அளவிலா நாட்டமும் தமிழ்நாட்டின் அன்றைய பிரபல நாட்டிய ஆசான்களிடம் பயின்று மேலும் நாட்டிய நுணுக்கங்களை கற்றிட தூண்டியது. எனவே, 1970-1972 காலப்பகுதியில் இந்தியா சென்று பத்மபஸ்ரீ அடையாறு லக்ஸ்மணனுடைய நாட்டிய நிறுவனமான ‘பரதசூடாமணி‘யில் பரத நாட்டியம், நட்டுவாங்கம் என்பவற்றில் டிப்ளோமா பயில்வையும், குரு.இராமநாதன் அவர்களிடம் மோகினியாட்டத்தையும், ‘பரத கலாஞ்சலி‘ பத்மபூஷண் தனஞ்சயன் சாந்தா தம்பதியர்களிடம் 1975ல் நாட்டியத்தில் சிறப்புப் பயில்வுகளையும் பூர்த்திசெய்தேன். ஏனக்குக் குருமாராக அமைந்த அத்தனை நாட்டிய ஆசான்களின் நாட்டியப் பயிற்றுவிப்பும், வழிகாட்டலும், ஆசீர்வாதமுமே என்னை இன்றைய நிலைக்கு உயர்த்திற்று. அத்தகைய சிறந்த குருமாரிடம் பயின்றமை இறைவன் எனக்களித்த பேறெனலாம்.



**இராமநாதன் நுண்கலைக்கழக நடனத்துறை வளர்ச்சியின் முக்கிய கால கட்டங்களில் அங்கு பணியாற்றியிருக்கிறீர்கள். நீங்கள் எவ்வாறு அங்கு இணைந்தீர்கள்? உங்கள் பங்களிப்பு எவ்வாறு அமைந்தது எனக் கூறமுடியுமா?**

சேர்.பொன்.இராமநாதனின் மருகராகிய கலாநிதி.சு.நடேசபிள்ளை அவர்கள் தன் மாமனாரின் நினைவாக

08 ஆம் பக்கம் பார்க்க...







# இராமநாதன் நுண்கலைக்கழக நடனத்துறை வளர்ச்சியின் முக்கிய கால கட்டங்களில் கலாபூஷணம் கிருசாந்தி இரவீந்திரா அவர்களின் பங்களிப்பு!

இராமநாதன் கல்லூரியின் ஒரு பகுதியில் தமிழர் செந்நெறிக்கலைகளை (கர்நாடக சங்கீதம், மிருதங்கம், நடனம் மற்றும் இதர வாத்திய இசைகள்) பயிற்றுவித்து வளர்க்கும் நோக்கில் 1960ம் ஆண்டு ஐப்பசி மாதம் விஜயதசமி நன்னாளில் ஆரம்பித்த நிறுவனமே இராமநாதன் இசைக்கல்லூரியாகும் (Ramanathan Music Academy). இந்நிறுவனத்தில் பணியாற்ற தமிழ்நாட்டின் பிரபல இசைமேதைகளை வரவழைத்து இக்கல்லூரி இயங்க வழிவகுத்தார். இக்கல்லூரியில் இசையும் இசை சார்ந்த பாடவிதானங்களே ஆரம்பத்தில் கற்பிக்கப்பட்டது. இராமநாதன் இசைக்கல்லூரியில் நடனக்கலையையும் கற்பிக்க வேண்டும் என்ற வேண்டுகோளின் நிமித்தம் பரதநாட்டியம் பயிற்றுவிப்பதற்கான தகுந்த ஒருவரின் தேவைப்பாடு ஏற்பட்டது. அக்காலப் பகுதியில்தான் இந்தியாவில் பரதசூடாமணியில் பயின்று நாடு திரும்பியிருந்தேன். எனது தகமையை நன்கறிந்த மானிப்பாய் ஐயாக்கண்ணு தேசிகர், நவாலியூர் கலையரசு. சொர்ணலிங்கம் மற்றும் அம்பிகைபாகன் போன்ற கலைஞர் பெருமக்கள் என்னை இராமநாதன் இசைக்கல்லூரியில் நடனக் கலையை பயிற்றுவிப்பதற்காகத் தேர்ந்தெடுத்தார்கள். 1973ம் ஆண்டு பங்குனி 1ம் திகதி இராமநாதன் இசைக்கல்லூரியில் நடன போதனாசிரியராக நியமிக்கப்பட்டு பரத நாட்டியப் பயில்வை அங்கு முதன்முதலாக ஆரம்பித்து வைத்தேன். இதேவேளையில் வாய்ப்பாட்டுத்துறை போதனாசிரியராக திருமதி.ஜெகதாம்பிகை கிருஸ்ணானந்தசிவம் அவர்களும் நியமிக்கப்பட்டார்.

1974சித்திரை மாதமளவில் அரசாங்கத்தினர் கலைகளை வளர்க்கும் நோக்கில் யாழ்ப்பாணத்தில் கலைப்பணியாற்றிவந்த பிரசித்தமான இந்நிறுவனத்தைப் பொறுப்பேற்று யாழ் மாவட்ட கல்வித் திணைக்களத்திடம் கையளித்தனர். அப்போது நடனக்கற்கை நெறிக்கு மேலும் ஒரு பிரசித்தமான நடனக்கலைஞரான கலாஷேத்திரா பட்டதாரி செல்வி.சாந்தா பொன்னுத்துரை அவர்களை தேர்வு செய்து நடனத்திற்குப் பொறுப்பாக நியமித்தனர். அன்றிலிருந்து செல்வி.சாந்தா பொன்னுத்துரையும் நானும் பரதக்கலையை அங்கு பயிற்றுவிப்பதில் இணைந்து செயற்பட்டோம். இராமநாதன் அரசினர் நுண்கலைக்கல்லூரி என்ற பெயர் மாற்றத்துடன் இந்நிறுவனம் இராமநாதன் கல்லூரி முதல்வர் திருமதி. அருணாசலத்தின் நிர்வாகித்தில் இயங்கத் தொடங்கியது.

01.12.1975இல் இந்நிறுவனம் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ் வளாகத்தினால் உள்வாங்கப்பட்டு இராமநாதன் நுண்கலைக்கழகம் என்ற பெயரில் இயங்கத் தொடங்கியது. ஏற்கனவே இந்நிறுவனத்தில் கடமையாற்றியவர்களுடன்





நானும் பல்கலைக்கழகத்துள் உள்வாங்கப்பட்டேன். ஆரம்ப காலங்களில் நான்கு வருட டிப்ளோமா கற்கைநெறியே நடைமுறைப் படுத்தப்பட்து.

1978இல் நடைபெற்ற இறுதிப்பரீட்சையில் நடனப் பகுதியில் முதலாம் பிரிவில் சித்தியடைந்து (Diploma in Dance) நாட்டியக் கலைமணி பட்டம் பெற்ற செல்வி. பத்மரஞ்சினியும் (திருமதி.உமாசங்கர்) நடனத்துறைக்கு நிரந்தர போதனாசிரியராக நியமிக்கப்பட்டார். 01.01.1979இல் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் யாழ்வளாகமானது தரமுயர்த்தப்பட்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் என்ற பெயரில் தன்னாதிக்கமுள்ள பல்கலைக்கழகமாக இயங்க ஆரம்பித்தது. அக்காலப்பகுதியில் நாட்டில் ஏற்பட்ட சூழல் காரணமாக 1990இல் செல்வி.சாந்தா பொன்னுத்துரையும் 1993இல் திருமதி. பத்மரஞ்சினி உமாசங்கர் அவர்களும் விலகிவெளிநாடு செல்ல நடனத்துறைக்கு ஒரேயொரு நிரந்தர விரிவுரையாளராக நான் கடமையாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது.

இக் காலப்பகுதியில் தான் இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் பட்டதாரிக் கற்கை நெறிகளை ஆரம்பிக்கும் வழிமுறைகளை பல்கலைக்கழக நிர்வாகத்தினர் முன்னெடுத்தனர். இதன் தொடர்ச்சியில் 1998இல் முதற்தொகுதி பட்டதாரிகள் வெளிவந்தனர். 1999இல் இராமநாதன் கல்லூரி தற்போதுள்ள புதிய கட்டடத்தில் இயங்க ஆரம்பித்தது. 2000ஆம் ஆண்டில் “யாழ்ப்பாணத்து நாட்டிய மரபு“ எனும் தலைப்பினில் ஆய்வினை மேற்கொண்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நடனத்தில் முதுதத்துவமாணி பட்டம் பெற்ற முதல் பட்டதாரியாகி, சிரேஸ்ட விரிவுரையாளராகப் பதவியுயர்வு பெற்று, பின் நடனத்துறைத் தலைவராகவும் பதவியேற்று 2006ஆம் ஆண்டுவரையும் பணியாற்றினேன்.

எனது பங்களிப்பு என்ற வகையில் கீழ வருவனவற்றை முக்கியமானவையாகக் குறிப்பிடலாம்.

பரதநாட்டியப் பயில்வினை இங்கு முன்னோடியாக ஆரம்பித்தமைளூ குருசிஷ்ய பயில்வு முறைமையில் பயிலப்பட்டு வந்த பரதநாட்டியம் பல்கலைக்கழக உயர்கல்வி பட்டக்கற்கைநெறியாக வளர்ச்சியடைந்த மிகமுக்கியமான காலப்பகுதியில் பல்கலைக்கழக நிர்வாகத்தினருடன் இணைந்து முக்கிய பங்களித்தமைளூ சோதனைகள் சவால்கள் இடப்பெயர்வுகள் என கலைப்பயில்வுக்கு மிக வசதிகள் குறைந்த பாதகமான இக்கட்டான காலப்பகுதியில் தான் (1975 - 2006) நடனத்துறைக்கான எனது பங்களிப்பு மிகுந்திருந்தது. இக் காலப் பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கலைநிகழ்வுகளில் எல்லாம் (முக்கியமாக பட்டமளிப்பு விழா வருடாந்த கலைவிழாக்கள்) நடனத்துறையினூடாக நாட்டிய நாடகங்கள் நிகழ்வுகள் தயாரித்தளித்தமைளூ பல நடன உருப்படிகளுக்கும் நாட்டிய நாடகங்களுக்கும் நாட்டிய அமைப்பு செய்தமைளூ நடனத்துறை மாணவர்கள் பட்டப்பின் கற்கை நெறிகளிலும் ஆய்வுகளிலும் ஈடுபட முன்உதாரணமாக சாதித்து காட்டியமைளூ ஏறக்குறைய 9 தொகுதி நடனத்துறை மாணவர்கள் என்னுடைய காலப்பகுதியில் கலைமாணிப்பட்டம் (BFA in Bharathanatyam) பெற்றமை.

**தங்களது பணி தொடர வெற்றிமணி வாழ்த்துகின்றது.**






K.K.L.
Textilien Schmuck Haushaltsware
சித்திரை தமிழ் புத்தாண்டை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை!
அனைத்து ஆடைகளும் 20% முதல் 50% விலைக்கழிவில்
07.04.2025 முதல் 14.04.2025 வரை
Rheinische str.56 44137 Dormund | Tel: 0231 96 98 6610
https://m.facebook.com/ kkl.textillenschmuck



# எங்கே தவறிழைத்தோம்

# தவறானவர்களிடம் உங்கள் சிக்கல்கள் பற்றி பேசுதல்



பொலிகையூர் ரேகா
(இங்கிலாந்து)

வாழ்க்கை என்பது கணக்கிலடங்காத சவால்களையும் தீர்வுகளையும் ஒருங்கே தன்னகத்தே கொண்டதாகும். இந்தப் பயணத்தில் நாம் ஒருபோதும் சரியான முடிவுகளை மட்டுமே எடுத்துவிட முடியாது. தவறுகள் மனித இயல்பு என்பதை உணர்த்தவே தவறுகள் இயல்பாக நடந்துவிடுகின்றது.

தவறுகள் என்பது தவிர்க்க முடியாதவை என்றாலும் முடங்கிக் கிடக்காது எங்கே தவறிழைத்தோம் எதனால் தவறிழைத்தோம் என்பதைக் கண்டறிந்து அதனால் ஏற்படும் விளைவுகளைக் கவனமாக ஆராய்ந்து அவற்றைச் சரி செய்தாக வேண்டும்.

நம் அன்றாட வாழ்வையும் அது சார்ந்த சிக்கல்களையும், எடுக்கும் முடிவுகளையும் நாம் சரியாக அலசி ஆராய்ந்தால் எங்கே தவறிழைக்கின்றோம் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

**தவறான முடிவுகளுக்கான காரணங்கள் சிலவற்றைப் பின்வருமாறு காணலாம்.**

★மனிதர்களையோ,சூழ்நிலைகளையோ புரிந்துகொள்ளாமை

★தொலைநோக்கில் ஆராயாமல் உடனடி நன்மைகளை மட்டுமே தேர்வு செய்தல்

★ பொறுப்புகளையும் பிழைகளையும் ஏற்காமல் பிறர் மீது பழி போடுதல்

★கோவம்,பயம்,ஆற்றாமை,சோம்பல் எனப் பல உணர்ச்சிகளின் அடிமையாகி அவற்றை வெளிப்படுத்துதல்

★சரியான திட்டமின்மையால் இயல்பாகவே தவறுகளுக்கான வழியை ஏற்படுத்திவிடுவது

★யாரையுமே கருத்தில் கொள்ளாது தன்னிச்சையாக முடிவுகளை எடுத்தல்

★வாழ்வில் அனைத்தையுமே எதிர்மறை எண்ணங்களோடு அணுகுதல்

★அதீத நம்பிக்கை காரணமாக முடிவெடுத்தல்

★பிறரைப் போல வாழப் பேராசை கொள்தல்

★தவறான மனிதர்களிடத்தில் சிக்கல்களைப் பேசுதல்

★சில நேரங்களில் நாம் சூழ்நிலைகளுகேற்பச் செயல்பட வேண்டும்.சூழ்நிலைச் சிக்கல்களை உள்ளத்தில் கொண்டு நாம் முடிவுகள் எடுக்காவிட்டால் தேவையற்ற உளைச்சலுக்கு ஆளாக நேரிடும்.

★உள அழுத்தம் மற்றும் சோர்வு காரணமாக நாம் எடுக்கும் முடிவுகள் சரியின்றிப் போகலாம்.அதனால் நாம் தெளிவாகச் சிந்தித்துச் சரியான உள நிலையில் முடிவுகளை எடுக்க வேண்டும்.

★நம் உள்ளத்தின் எதிர்மறை எண்ணங்களே நம்மைத் தவறான முடிவுக்குத் தூண்டுகிறது. இயன்றவரை நேர்மறை எண்ணங்களோடு வாழப் பழக வேண்டும்.







★நம் திறமைகளையும்,சுற்றியுள்ள மனிதர்களையும், சூழ்நிலைகளையும் சரியாக மதிப்பீடு செய்யாமல் அதீத நம்பிக்கை காரணமாக முடிவுகளை எடுப்பதைத் தவிர்த்தல் வேண்டும்.

★உண்மையான வாழ்க்கையைப் புரிந்து கொள்ளாமல் மாயைகளை நம்பிக் கற்பனை வாழ்க்கை வாழும் ஆசைகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

★ சமூக வலைத்தளங்களிற்காக வாழாமல் சமூகத்தின் ஒரு பகுதியாகச் சரியான வாழ்வை நடத்த யதார்த்தத்தைப் புரிந்து வாழும் பக்குவத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

★கடந்த கால வாழ்க்கையின் காயங்களை எண்ணாமல் நிகழ்கால வாழ்வின் வாய்ப்புகளைப் பயன்படுத்த வேண்டும்.

★பிறரைப் போலவே வாழ வேண்டும் என்ற உளநிலையை விடுத்துத் தனித்துவமான சிந்தனைகளோடு சரியான வழியில் சரியான நடைமுறைகளில் உலகத்தினரைப் பின்பற்ற வேண்டும்.

★உண்மையை மறைக்காமல் தவறுகளை மறுக்காமல் அவற்றைச் சரி செய்யத் தயாராக வேண்டும்.

★ தியானம் அல்லது சுயபரிசோதனைகள் மூலமாக உங்களுக்கான எதிர்மறை உணர்வுகளைக் கட்டுப்படுத்த வேண்டும்.

தெய்வப் பிறவகளே தவறிழைத்ததாய் நாம் அறியும்போது மனிதப் பிறவிகளான நாம் எந்தத் தவறுமே செய்யாமல் இருக்க முடியாது.எந்தத் தவறுமே செய்யாதவர்கள் மனிதர்களாகவே இருக்க முடியாது.ஆனால் அவற்றைச் சரி செய்வதே நம் வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

ஒவ்வொரு தவறையும் பாடமாகக் கொண்டு அவற்றைப் பொருத்தமாகக் கையாள வேண்டும்.

நாம் எங்கே தவறிழைத்தோம் என்று உணரப்படும் நொடிகளிலிருந்து தொடங்குகின்றது நமக்கான தெளிவான வாழ்க்கைப் பாதை.

# மனித மனங்களின் குப்பையை கரை சேர்க்கும் கடல் அலை

இந்தக்கடல் குப்பையாக உள்ளது. இதில் எப்படிக்குளிப்பது. கடலில் ஏன் இப்படி அலையடிக்கிறது.

அலை இல்லை என்றால் இப்படி குப்பைகள் ஒதுங்காது அல்லவா.

அலை அழகு! இயற்கை!! இயற்கை!!! என்று போற்றி மகிழ்கிறோம். இந்தக்கரையில் ஏன் இவ்வளவு குப்பையை அலை அள்ளிவரவேண்டும்.

அள்ளி வந்த குப்பை...

பனம் பாளை, பாசி, மரக்குச்சி, பன்னாடைகள், சிப்பி ஓடுகள், சங்குகள், இவை என்று எண்ணினால் அவை தவறு.

அப்படி அலை அள்ளிவந்தாலும் இயற்கை அது தவறில்லை.

ஆனால்...

வந்த குப்பைகள் மனித மனங்களின் குப்பை.

பிளாஸ்டிக் போத்தல், பிரிச்சு உண்ட உணவுகளின் பொலீத்தீன் பேப்பர்கள். சிகரெட் அடிக்கட்டைகள், இப்படி இன்னும் பல மனிதன் தினம் பாவிக்கும் பொருட்களின் கழிவுகள்.

யாரோ ஒரு சிலர் நகரைச் சுத்தமாக வைத்திருக்க, கடலில் எறிந்தும் சென்றிருக்கலாம். ஆனால் இப்போ கடலும், கரையும், அல்லவா நரகமாகின்றது.



குப்பை கரை சேர்ந்த இடம் ஐந்து நட்சத்திர ஓட்டலில் கடற்கரை. அலைக்கு தெரிந்ததெல்லாம், வானில் வரும், நிலவும், நட்சத்திரங்களும் மட்டுமே.

அலைக்கும் தெரியுமா தரையில் உள்ள நட்சத்திரங்களின் மதிப்பு. குப்பை போட்ட இனமே துப்பரவு செய்கிறது.

துடுக்கை முத்மிடவேண்டிய அலை, துடைப்பத்தை அல்லவா முத்தமிடுகின்றது.

மீண்டும் இந்தக்குப்பைகள் கப்பலேறி கடலுக்கு செல்லுமோ .

அது குப்பை மனங்களுக்கே வெளிச்சம்.

படம். வெற்றிமணி.
இடம். Lombok, இந்தோனேசியா.
ஆனால் அழகான அமைதியான தீவு.



# ஒரு கல்யாணக் கதை

நவமகன் (நோர்வே)

08.12.24 ஒரு கல்யாணவீட்டிற்குச் சென்று வந்த மனநிலையிலேயே இன்றைக்கும் இருக்கின்றேன். ஆனால், சென்று வந்தது கல்யாண வீட்டிற்கல்ல, “ஒரு கல்யாணக் கதை” நாடகத்திற்கே.

மண்டப வாசலில் இருந்தே நாடகம் ஆரம்பித்துவிட்டது. மணமக்களின் பெற்றோர் பார்வையாளர்களுக்கு வாசலில் வைத்தே பெட்டு வைத்து பன்னீர் தெளித்து உள்ளே அனுப்பினார்கள்.

மண்டபத்தினுள்ளே மங்களவாத் திய இசை ஒலித்துக்கொண்டிருந்தது. மேடையின் திரை விலகியபோது உண்மையில் ஒரு கல்யாண நிகழ்வில் நிற்பதுபோன்ற உணர்வே ஏற்பட்டது.

அந்தளவுக்கு கல்யாணக் காட்சிகள் மிகவும் தத்துரூபமானவையாக இருந்தன. (இருத்திவைத்து வாழையிலையில் சாப்பாடு மட்டுந்தான் பரிமாறவில்லை.) இக் கல்யாணத்தில் (நாடகத்தில்) நமது சமூகத்தில் கலாசாரம் என்றும், பண்பாடுகள் என்றும் காலங்காலமாக கட்டமைத்துப் பேணிவந்த சில பிற்போக்குத்தனமான பழமைவாதக் கொள்கைகள் கட்டுடைக்கப்பட்டிருந்தமையானது மிகவும் சிறப்பான அம்சங்களாக இருந்தன.

அன்று நமது முன்னோர்கள் சிந்தித்த முறைக்கும், இன்று நாம் சிந்தித்துக் கொண்டிருக்கும் முறைக்கும், நாளை நமது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் சிந்திக்கப்போகும் முறைக்குமான சிந்தனை மாற்றங்களே இத்தகைய கட்டுடைப்புக்களை நிகழ்த்திக்கொண்டிருக்கின்றன.

சில பழமைவாதக் கொள்கையுடையவர்களுக்கு இவை பிடிக்காத விடயங்களாகக்கூட இருக்கலாம். ஆனால், சமூக நலச் சிந்தனையுடைய படைப்பாளிகள் பழமைவாதக் கிடங்குகளிலிருந்து இத்தகையவர்களையும் மீட்டுவிடவே படைப்புத்திறன்களைப் பிரயோகிப்பார்கள். அந்த வகையில் இங்கு ஒஸ்லோவில் இத்தகைய முற்போக்குச் சிந்தனைகளை ரூபன் சிவராஜா, கவிதா லட்சுமி போன்றோரின் படைப்புகளில் காண்பதொன்றும் புதிதான விடயமல்ல.



இந்த நாடகத்திற்கான எழுத்துருவும் ரூபன் சிவராஜா அவர்களுடையதே. நாடகத்தினை சர்வேந்திரா தர்மலிங்கம் அவர்களும் ரூபன் சிவராஜா அவர்களும் நெறியாள்கை செய்திருந்தார்கள். பாடல்கள், பாடலிசை, பின்னணி இசை, நடன அமைப்பு, ஒளியமைப்பு, மற்றும் கலைஞர்களின் ஆற்றுகைகள் அனைத்தும் சிறப்பானதாக இருந்தன. இப்படியொரு அரங்காற்றுகையை நிகழ்த்துவதென்பது இலகுவான விடயமல்ல, அனைத்துக் கலைஞர்களினதும் கடின உழைப்பிற்கு எனது பாராட்டுக்கள். நாடகம் House full காட்சியாக அரங்கேறியதனால்.

பலர் மீள் காட்சிக்காக காத்திருக்கின்றார்கள். அதனால் நானிங்கே கதையைக் கூற விரும்பவில்லை. Forum theatre பாணியில் நாடகத்தினை ஒரு கட்டத்தில் நிறுத்திவிட்டு, நாடகத்தின் தொடர்ச்சி அல்லது முடிவு எப்படி இருக்க வண்டும் என்ற கேள்வியை பார்வையாளர்களிடம் முன்வைத்துக் கருத்துக்கள் கேட்கப்பட்டதும், புதிய சிந்தனைகளுக்கு வழிகோலுமுகமாக கருத்தாடல்கள் நிகழ்ந்ததும் சிறப்பு.

அத்தோடு நிகழ்வின் ஆரம்பத்தில் அரங்கப் பாடல்கள் இசைக்கப்பட்டன. இந்நிகழ்வும் சினிமாப் பாடல்களைக் கேட்டுப் பழகியவர்களுக்கு வித்தியாசமான அனுபவமாகவும் இரசிக்கக்கூடியதாகவும் இருந்திருக்கும் என்றே நம்புகின்றேன். அதிலும் ‘மந்திர வலிமை உடையவர் நாங்கள்’ என்ற பாலஸ்தீனப் பாடலும், ‘எனக்குத் தடைபோடும் பொல்லாத உலகத்தை..’ என்ற பாடாலும் மிகச் சிறப்பு.



டோட்முண்ட் மாநகரில்....
தமிழர் அரங்கம்
வெள்ளிக்கிழமைகளில்
Jeden Freitag
தமிழர் அரங்கம்
Rheinische Srt.76-80
44137 Dortmund
Info:0151 633 633 33
0178 146 006 3

சனிக்கிழமை 15.00- 18.00
திரையிசை நடனம்
(Cinimatic Dance)

கீபோர்ட் (Keyboard)
வெள்ளிக்கிழமை 18:00-19:00
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது.சிறுவர்களில் இருந்து பெரியோர்கள் வரை இணைந்து கொள்ளலாம்
Für Kinder und Jungendliche und Erwachsene!
6€ Pro Stunde

தமிழ் மொழி (Tamillsche Sprachunterricht)
வெள்ளிக்கிழமை 16:00-17:45
Free
சிறார்களுக்கும்,இளையோர்களுக்கும், எளிமையான முறையில் தமிழ் கற்பிக்கப்படும்.
Für Kinder und Jungendliche!Auch speziell jugendliche, die sich mit der tamilische Sprache nicht auskennen

யேர்மன் மொழி (Deutsch für Anfänger / Innen)
ICH LERNE DEUTSCH
6€ Pro Stunde
வெள்ளிக்கிழமை 17.45 -19.15
யேர்மன் மொழியில் பேசவும் எழுதவும் கற்பிக்கப்படும்
யேர்மன் குடியுரிமை பெறுவதற்கு பயன் உள்ளதாக அமையும்



# என்னிடம் அடிக்கடி கேட்கப்படும் சில கேள்விகள்

**அதியமானுக்கு அவ்வை நெல்லிக்கனியைக் கொடுத்தது அவர் ஆயுளை நீட்டிப்பதற்கு என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.**



**தீபா சீறிதரன்**
**(தைவான்)**

உங்கள் உடலைக் கட்டுக்கோப்பாக வைத்திருப்பதன் ரகசியம் என்ன? உங்கள் உணவு முறையைப் பற்றிச் சொல்லுங்கள். நீங்கள் எந்தவிதமான உடற் பயிற்சியைச் செய்கிறீர்கள்?

இதைப் பற்றி ஒரு நீண்ட பதிவை எழுத வேண்டும் என்று பல நாட்கள் நினைத் திருக்கிறேன். என்னைப் பொறுத்த வரையில் உடற்பயிற்சி, உணவுப் பழக்கங்கள் என்பதை நான் வெறும் உடல் எடை குறைப் பிற்காகவோ அல்லது உடலைக் கட்டுக்கோப்பாக வைத்திருப்பதற்காகவோ செய்யவில்லை. இதை ஒரு வாழ்க்கை முறையாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

மனித உடல் உண்மையிலேயே மிகவும் அபாரமான, நுணுக்கமான ஓர் ஆயுதம். படைப்பாற்றலையும், உடல் உழைப்பையும், பரிணாமத்தை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்லும் அறிவையும் தாங்கி இருக்கும் ஓர் அட்சய பாத்திரம் மனித உடல். எனவே அதன் ஆரோக்கியத்தைப் பேணுவதில் நாம் அனைவரும் கவனமாக இருக்க வேண்டும். ஆனால் பலரும் இங்கே உடல் என்பதை (Take it for granted) இயல்பு நிலையில் வழங்கப்பட்டது என்ற முறையிலேயே எடுத்துக் கொள்கின்றனர். ஆனாலும் சமீப காலமாக இந்நிலை மாறி வருவது மகிழ்ச்சியளிக்கிறது.

நான் கீழே குறிப்பிடப் போகும் உணவு முறை, உடற்பயிற்சிகள் மட்டுமே ஆரோக்கியமான வாழ்விற்குச் சிறந்தது என்று என்னால் சொல்ல முடியாது. பலதத் துவங்களைப் போலவே அறிவியலும் பலவிதமான தர்க்கங்களை உள்ளடக்கியது. இன்று ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கப்பட்டவை கூட நாளை மறுக்கப்படலாம். வேறு hypothesis முன் வைக்கப்படலாம். ஒருவரால் ஏற்றுக்கொள்ளப்படும் உணவுப்பழக்க வழக்கங்களும் உடற்பயிற்சிகளும் மற்றொருவரால் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருக்கலாம். எனவே அவரவர்க்கு உகந்ததை ஓரளவு அறிவியல் ரீதியாக அலசி ஆராய்ந்து பார்த்து நடைமுறைப்படுத்திக் கொள்வது நல்லது.

## நான் பின்பற்றும் வாழ்க்கை முறை

காலையில் எழுந்தவுடன்(6:30) காலைக்கடன் கழித்தல். பின் 15ல் லிருந்து 20 நிமிடங்கள் வரை சின்ன சின்ன உடற்பயிற்சிகளைச் செய்வேன். பாடி ஸ்ட்ரெட்ச்சிங், 20 தோப்புக்கரணம் போன்றவை. நான் 40 வயதைக் கடந்து விட்டதால் என்னைக் கொஞ்சம் கொஞ்சமாக முதுமைக்குத் தயார்ப்படுத்திக் கொள்கிறேன். எனவே இரண்டு மூன்று ஆண்டுகளாகக் கண்களை மூடிக் கொண்டு வீட்டில் நடை பயில்வது. ஒற்றைக்காலில் சில நிமிடங்கள் நிற்பது, நடப்பது. அன்றாடக் காரியங்களைச் செய்யும்பொழுது இடது கையையும் வலது கையையும் மாற்றி உபயோகித்துக் கொள்வது. கண்களுக்கான பயிற்சி, கண்களைச் சுழற்றுதல், 30- 40 முறை கண்களைச் சிமிட்டுதல் போன்ற சின்ன சின்னப் பயிற்சிகளைக் காலையில் செய்வேன். வயதாக ஆக நம் புலன்களின் வேலைப்பாடு குறைய ஆரம்பிக்கும். அவற்றை ஓரளவு ஈடுகட்டி வாழ்வதற்கான முயற்சிகள் இவை.

அதற்குப் பின் அரைத் தேக்கரண்டி பட்டைப் பொடியைத் தண்ணீரில் கொதிக்க வைத்து அது மிதமான சூட்டுக்கு ஆறியவுடன் அதில் ஒரு தேக்கரண்டி சுத்தமான தேனைக் கலந்து குடிப்பேன். தேனில் உடலுக்குத் தேவையான குடல் பாக்டீரியாக்கள் (gut microbiome) அதிகமாக இருக்கிறது மற்றும் பட்டை பொடி மெட்டபாலிசத்திற்கு மிகவும் உதவி செய்யும். இதைத் தவறாமல் தினமும் செய்து பாருங்கள். உங்கள் மெட்டபாலசத்தில் நல்ல முன்னேற்றத்தைக் காணலாம். ஓர் ஆரோக்கியமான வாழ்விற்கு நல்ல மெட்டபாலிசம் மிகவும் முக்கியமானது.



என்னுடைய காலை உணவு (9:30) பெரும்பாலும் ஒரு கப் பழங்கள் குறிப்பாக பப்பாளி அல்லது கொய்யாப்பழம். ஒரு துண்டு பிரெட் ஒரு கோப்பை எலுமிச்சை சாறு. எலுமிச்சை சாற்றில், சர்க்கரையோ, உப்போ சேர்த்துக் கொள்வதில்லை. இது சர்க்கரை மற்றும் உப்பு கட்டுப்பாட்டுக்காக அல்ல.

என்னைப் பொறுத்தவரையில் உங்கள் இளமையின் ரகசியம் என்று கேட்பவர்களுக்கு நான் சொல்வது எலுமிச்சை சாற்றைத் தான். அதில் நிறைய ஆன்டி-ஆக்ஸிடென்ட் இருக்கிறது. அது மட்டும் இல்லாமல் நம் உடலில் புது உயிரணுக்கள் உருவாவதற்கும் அதிகப்படியான விட்டமின் சி அதில் இருக்கிறது. இங்கே நெல்லிக்காய்கள் கிடைப்பதில்லை. அதனால் எலுமிச்சை சாற்றைத் தவறாமல் குடிக்கிறேன். நம்மூரில் நெல்லிக்காய்கள் அதிகமாகக் கிடைக்கும். அதை விடவும் மிகச்சிறந்த immortal மருந்து வேறு ஒன்று இருக்குமா என்று எனக்குத் தெரியவில்லை. அதியமானுக்கு அவ்வை நெல்லிக்கனியைக் கொடுத்தது அவர் ஆயுளை நீட்டிப்பதற்கு என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

என்னுடைய மதிய உணவு (12.30-1:00) ஐந்தாறு தேக்கரண்டிகள் சாதம் இரண்டு மூன்று வகைக் காய்கறிகள் பெரும்பாலும் வேகவைத்தவை. (பச்சைக் காய்கறி வகைகள், கீரை வகைகள், நார்ச் சத்து மிக்கவை). வாழைத் தண்டு,பூ இங்கே கிடைப்பதில்லை. கிடைக்கும் இடத்தில் வாழ்பவர்கள் அவற்றை நிறைய சேர்த்துக்கொள்ளலாம். புரதச்சத்துக்காக முட்டை அல்லது சோயா. நான் வெஜிடேரியன் என்பதால் முட்டை அல்லது சோயாவை மட்டும் சாப்பிடுகிறேன். மாமிச உணவு உண்பவர்கள் இன்னும் நல்ல புரதத்தை எடுத்துக் கொள்ளலாம்.

29 ஆம் பக்கம் பார்க்க...

NANDY'S CURRY'S & MORE WWW.NANDYS.DE
Düsseldorf
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை
Nandy's Catering & Partyservice
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும் குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம்.
இலங்கை, இந்திய, ஐரோப்பிய உணவுகளையும் தயாரித்து வழங்குகின்றோம்.
பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!
உணவு விநியோகம் பரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிட்டுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளோம்.
தொடர்புகளுக்கு: 0173-7424955
0211-7691974
www.Nandys.de | email: info@nandys.de


நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்
Jaffna Bazar Jewellery
தங்க நகைகள் என்றால் தங்கள் மனதில் நிலைத்து இருப்பவர்கள் நாங்கள் என்றும் நாடுகள்
2024ம் ஆண்டின் புதிய வரவு! புத்தம் புது அழகிய டிசைன்களில் தங்க நகைகள்
பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்
திருத்த வேலைகள் குறுகிய காலத்துள் செய்து தரப்படும்.
Branch:
Jaffna basar.
Taunus Str 31,
60329 Frankfurt Main
உங்கள் இலத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்
ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு
KADHIR
Lalla
Basmati Rice
பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
அனைத்தும் எம்மிடம் தரமாக
மலிவாகக்கிடைக்கும்
Jaffna Bazar
Jaffna Bazar, Kaiser Straße.49,
69329 Frankfurt Main
Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425

# உங்கள் நல்வாழ்வுக்கு பாரதி தரும் வெகுமதிகள்

தமிழ்ச் சுவை பருகியோர் கண்களில் காவடி ஆடாமல் இருந்திருக்காது காவடி சிந்து பாடல்கள். அத்தனை நயமும் , அழகும் கொட்டிக் கிடந்தாலும் , இலக்கியத் தரத்தை எட்ட வைக்கும் அளவு உட்கருத்தும் சொல்லாட்சியும் மிளிரும் வகையில் சிந்து பாடலுக்கு உயிர் கொடுக்கிறார் பாரதி. மிக பிரமாண்டத்தில் நர்த்தனமாடுகிறது பாரதியின் காவடி சிந்து.

அத்வைதம்/ஒருமைஎன்னும்மாபெரும் சக்தி உணர்வை மீண்டும் மீண்டும் தன் கவிகளினூடு பெரும் கருணையோடு சொல்ல முற்பட்ட தத்துவக் கவிஞன் பாரதி. அந்த சுத்த நிலையில் பாரதி வாழ்ந்தான் என்பதற்கு அக்கவிகளில் தென்படும் அனுபவச் சொல்லாட்சியே சாட்சி.

ஒருமைப் பொருளை நன்கு ஆராய்ந்து உணர்த்தவர்க்கு, என்னெவெல்லாம் வெகு மதியாக வாழ்வில் கிடைக்கும் என்று பட்டியல் இட்டு சொல்கிறார்.

## 1. துயர் தீரும்

எந்த ஒரு விடயத்தை எடுத்தாலும் அதில் உள்ள இருமை நிலையினால் பல பேதமைகளுக்குள் சிக்கி கொள்கிறோம். இதனால் பல்வேறு முரண்பாடுகளை எதிர் கொள்கிறோம். இந்த பேதமை என்னும் பேய் அல்லது முரண்பாடு என்னும் புலப்படா பூதம் எம்மை துயரம் என்னும் பேரிருளில் தள்ளிவிடுகிறது. எனவே முரண்பாட்டினை தவிர்க்க பேதமை அகல வேண்டும். அதற்கு யாவும் ஒன்று என்ற அறிவு வேண்டும்.

## 2. பரம ஞானம் கிட்டும்.

மேற் சொன்ன இந்த அறிவு தான் பரம ஞானம்என்றுமிகஎளிதாகஞானநிலைக்கு வரைவிலக்கணம் சொல்கிறார்.



கலாதுரி
திவ்யா சுஜேன்
(இலங்கை)

## 3. நீதியாம் அரசு செய்வர்

முறை தவறாத நல்ல வழியில் அரசு செய்வார்கள். அதாவது தமது உடல், உளம், மனம், புத்தி, வாக்கு, செயல் யாவும் ஒன்றுக்கொன்று முரண்படாத வகையில் ஐம்புலன்களையும் சீரான விதத்தில் ஆட்சிசெய்வர்.

## 4. நீண்ட காலம் வாழ்வர்

இதில் இரண்டு விடயங்களை கருதலாம். ஒன்று இவ்வாறு உடலும் உள்ளமும் சம





நிலையில் இயங்கும் போது இயற்கையாகவே பல்லாண்டுகளுக்கு ஆரோக்கியமாக வாழ்வர். இதனால் நீண்ட ஆயுள் கிட்டும். இரண்டாவது இத்தகை பரம ஞானத்தோடு வாழ்ந்தோர் பெருமை, அவர்கள் இவ்வுலகை விட்டு நீக்கினாலும் வாழ்ந்துகொண்டு இருக்கும்.

## 5. எந்த நெறியும் எய்துவர்

மேற்குறிப்பிட்ட நான்கு படிகளையும் மீண்டும் ஒரு முறை படித்து பாருங்கள். அவற்றை எல்லாம் நாம் அடைந்து விட்டதாக கருதும் போதே நமக்குள் சக்தி பிறக்கும். உண்மையிலேயே அந்த நிலையை அடைந்து விட்டால் ? நிச்சயமாக நமக்கு என்ன வேண்டும் என்று நினைக்கின்றோமோ அதனை நினைத்த மாத்திரத்திலேயே அடையலாம். அதில் எந்த விதமான ஐயமும் இல்லை என்று ஐயன் பாரதி தன் பல கவிகளில் குறிப்பிட்டு இருக்கிறார்.

இந்நிலையை எய்த வேண்டுமானால் நம்மிடத்தே இருக்க வேண்டிய ஒரே தன்மை என்னவென்றால் ? “ சரணடைதல் “ . நான் என்று ஒரு பொருள் இல்லை என படைப்பினடத்தே சரணடைந்து ஐக்கியமாகும் சுகானுபவம். இதனை அடைய ஆதாரமாக சக்தியின் பாதங்களில் அடைக்கலமாவோம். இதுவே ஒரே வழி என மிக மிக அற்புதமான காவடி சிந்து பாடலின் முடிவில் கூறி நிற்கிறார்.


ஆக, பட்டியலிட்ட ஐந்தும் கிடைக்க, ஒருமையை ஆய்ந்து அறிந்துணர வேண்டும் , அதற்க்கு அன்னையை சரணடைவதே ஏக மார்க்கம்.

தான் அனுபவித்த மொத்த சுகத்தையும் பரந்த மனதுடன் செறிந்த சொல்லாட்சியில் எளிமையாக புரிந்து கொள்ளும் வகையில் மொழிபெயர்க்கும் வல்லமை பாரதியிடத்தே உண்டு. ஆதியான சிவனும், ஜோதியான சக்தியும் ஒன்றாய் கலந்து அங்கும் இங்கும் எங்கும் என வியாபித்திருக்கும் காட்சியைச் சொல்ல , சொற்களின் நர்தனத்தில் உணர்வின் வேகத்தை புரிய வைக்க, எப்பேர்ப்பட்ட ஆழ்ந்த அனுபவம் இருந்திருக்க வேண்டும் நம் பக்குவச் சித்தன் பாரதிக்கு என மீண்டும் மீண்டும் வியந்து, காவடி சிந்து பாடலை நவராத்திரி காலத்தில் நம் வெற்றிமணி வாசகர்களோடு பகிர்ந்து கொள்ள துணை நின்ற பரம்பொருளினடத்தே சரணடைகிறேன்.

**ஆதியாம் சிவனும், அவன் சோதியான**
**சக்தியும் தான்**
**அங்கும் இங்கும் எங்கும்**
**உளவாகும் – ஒன்றே**
**ஆகினால், உலகனைத்தும்**
**சாகும் – அவை**
**அன்றியோர் பொருளுமில்லை,**
**அன்றி ஒன்றுமில்லை, இதை,**
**ஆய்ந்திடில் துயரமெல்லாம்**
**போகும் – இந்த**
**அறிவுதான் பரம ஞானம் ஆகும்**
**நீதியாம் அரசு செய்வர், நிதிகள் பல**
**கோடி துய்ப்பர்.**
**நீண்டகாலம் வா ழ்வர் தரை**
**மீது – எந்த**
**நெறியும் எய்துவர்**
**நினைத்த போது – அந்த**
**நித்தமுத்த சுத்தபுத்த சத்தபெரும்**
**காளி பதம்,**
**நீழல் அடைந்தார்க்கு இல்லையோர்**
**தீது – என்று**
**நேர்மை வேதம் சொல்லும் வழி ஈது.**




சர்வதேச பெண்கள் தின வாழ்த்துகள் (பங்குனி 08)


AJ
ENTERTAINMENT
ARUN JESUTHASAN
OLYYN THANASINGH
PRESENTS
POWERED BY
tamil.de
portal • lifestyle • entertainment
SANTHOSH
NARAYANAN
LIVE IN GERMANY
07.06.2025
GET YOUR TICKETS NOW
ticketmaster®



# அநுர அரசின் கன்னி பட்ஜெட்டும் வட, கிழக்கு மக்களின் எதிர்பார்ப்பும்

கொழும்பிலிருந்து...
**என்.அசோக்**



நீண்ட வருடங்களாக வெற்றிமணி பத்திரிக்கு "அரசியல் கள த்தில்' தொடர்ந்தும் பல கட்டுரை களை எழுதி வந்திருந்த ஆர். பாரதி அண்மையில் காலமானார். அவருடைய இந்த மறைவு ஊடகத்துறைக்கு மாத்திரமல்ல வெற்றிமணியின் வாசகர்களுக்கும் பேரிழப்பு என்பதை நாம் அறிவோம். அவருக்கு வெற்றிமணி வாசகர்கர்கள் சார்பில் அஞ்சலி செலுத்தும் அதேவேளை, அவர் விட்டுச் சென்ற அந்தப் பணியை அவரது விழுதுகளாக பல ஊடகங்களில் பணியாற்றுபவர்களில் ஒருவனான நான் தொடர்ந்து பாரதியினுடைய பாசறை கற்றதற்கு இனங்க இந்தப் பத்தியில் இனிவரும் காலங்களில் தொடர இருக்கிறேன்.

அனுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கன்னி வரவுசெலவுத்திட்டம் (17.02.2025) திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அது தொடர்பான விவாதங்கள் தற்சமயம் நடைபெற்றுவருகிறது. இந்த வரவுசெலவுத்திட்டம் தொடர்பில் பல்வேறு பேசுபொருள்கள் அரசியல் பரப்பில் பேசப்பட்டுவருகிறது.'இது மக்களுக்கான ஒரு பட்ஜெட்' என்றும் 'எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலை இலக்கு வைத்த பட்ஜெட்' என்றும் 'முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பட்ஜெட்டுக்கும் இந்த பட்ஜெட்டுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை"என்றும் பல்வேறுபட்ட கருத்துக்களும் விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில்,இந்த வரவுசெலவு திட்டத்தில் தமிழ் மக்களுக்கு குறிப்பாக வடக்குகிழக்கு மாகாணங்கள் தொடர்பிலும் அங்கு வாழ்கின்ற மக்கள் தொடர்பிலும் புதிய ஆட்சியாளர்கள் எத்தகைய கவனத்தை அல்லது புரிதலை கொண்டிருக்கிறார்கள் என்பதை அலசுவதே இந்த பத்தியின் நோக்கமாகும்.

வடக்குகிழக்கு மாகாணங்கள் என்பது ஏனைய மாகாணங்களுடனோ அல்லது இலங்கையில் வாழ்கின்ற ஏனைய சமூகத்தினருடனோ ஒப்பிட்டு நோக்க முடியாத வரலாற்றை கொண்டது. காரணம், இந்த மாகாணங்கள் நீண்டகால ஆயுத போராட்டத்தை எதிர்கொண்ட மாகாணங்களாகும். அதேபோல், இலங்கையின் சுதந்திரத்துக்கு பின்னரான 76 வருடங்களாக இந்த மாகாணங்களில் வாழ்ந்தவாழ்கின்ற மக்கள் பல இழப்புகளை அநீதிகளை சந்தித்திருக்கிறார்கள். அந்த இழப்புகளின் வலிகளைவடுக்களை இன்றும் சுமந்துகொண்டு வாழும் ஒரு இனமாக தமிழர்கள் இருக்கிறார்கள்.

ஆகவே வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அல்லது அங்கு வாழ்கின்ற மக்களுக்கு இலங்கையின் ஆட்சியாளர்களோ அல்லது சர்வதேச சமூகமோ வழங்கும் உதவிகளாக இருக்கட்டும் அல்லது தீர்வாக இருக்கட்டும் எதுவாக இருந்தாலும் அந்த மக்கள் அனுபவித்த துன்பங்களையும் அவர்கள் மத்தியில் யுத்த வடுக்களை சுமந்துகொண்டு வாழும் மக்களையும் கவனத்தில் கொண்டே அதற்கேற்பவே முன்னெடுக்கப்பட வேண்டும்.



அதைவிடுத்து தன்னிச்சையாக, எழுந்தமானமாக ஏனைய மாகாணங்களைப் போன்று வடக்குகிழக்கு மாகாணங்களையும், ஏனைய சமூகங்களை போன்று வடக்குகிழக்கு மக்களையும் கருதி ஒரு திட்டமோ அல்லது உதவிகளோ செல்லுமாகவிருந்தால் அது விழலுக்கு இறைத்த நீராகவே போகும்.

யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னரான கடந்த 16 வருடங்களாக ஆட்சியில் அமர்ந்த மகிந்த ராஜபக்சவாக இருக்கட்டும் மைத்திரிபால சிறிசேனரணில் விக்ரமசிங்கவாக இருக்கட்டும் அதன்பின்னர் வந்த கோதாபய ராஜபக்ச மற்றும் ரணில் விக்ரமசிங்கவாக இருக்கட்டும் அனைவருமே வடக்குகிழக்கு மக்களுடைய வலிகளையோ அல்லது அவர்களுடைய எதிர்பார்ப்புகளையோ பூர்த்தி செய்து அவர்களின் வலிமிகுந்த மனங்களுக்கு ஆறுதல் அளிக்கும் எந்த விடயத்தையும் செய்திருக்கவில்லை. புதிய ஆட்சியாளர்களும் (தமிழ் மக்கள் விடயத்தில்) அந்த பாதையில் செல்ல முயற்சிப்பதாகவே அவர்களுடைய செயற்பாடுகள் வெளிப்படுத்துகின்றன.

தேசிய மக்கள் சக்தியின் கன்னி வரவு செலவு திட்டத்தில் வடக்கு மாகாணத்துக்கு என்று பார்க்கும் பொழுது வட்டுவாகல் பால புனரமைப்புக்கு 1000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கும் ▪

29 ஆம் பக்கம் பார்க்க...





### நடுப்பக்கம்

சேவியர்
(தமிழ்நாடு)

# பெண்கள் அன்றும்; இன்றும்



வரலாறு எப்போதுமே பெண்களைச் சுற்றியே கட்டமைக்கப்படுகிறது என்பது தான் நிஜம். குடும்பங்கள் இல்லாமல் பழைய கால வரலாற்று நாயகர்கள் இல்லை. பெண்கள் இல்லாமல் இன்றைக்கு நவீன நாயகர்களே இல்லை. இது தான் யதார்த்தம். இதை ஏற்றுக் கொள்பவர்கள் ஆண்கள். ஏற்றுக் கொள்ளாதவர்கள் ஆணாதிக்க வாதிகள் அவ்வளவு தான் வேறுபாடு.

ஒரு கால்தில் தண்ணி எடுத்துக் கொண்டிருந்தார்கள் பெண்கள், அது தவிர்க்க முடியாத வேலை. இன்றைக்கு அலுவலகங்களில் தண்ணி காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இது யாரும் தப்பிக்க முடியாத வேலை. இன்னும் பழைய காலத்தின் நீட்சியாக யார் பெரிசு, யார் சமம் என்றெல்லாம் பேசிக் கொண்டிருக்க முடியாது. ஆண் என்பவன் ஆண். பெண் என்பவள் பெண் அவ்வளவு தான். ஆப்பிளையும், ஆரஞ்சையும் ஒப்பீடு செய்வது போல இது. இதுவே புதுவித சிந்தனை !

## 1. வீட்டு ராஜ்யம் முதல் அலுவல் ராஜ்ஜியம் வரை !

உண்மையிலேயே மல்டி டாஸ்கிங் எனப்படும் ஒரே நேரத்தில் பல வேலையைச் செய்யும் கலை பெண்களுக்கே வாய்க்கிறது. ஒரே நேரத்தில் அடுப்பையும் பார்த்து, காய்கறியையும் பார்த்து, பாத்திரமும் கழுவி, அழும் பிள்ளைக்கு ஒரு சமாதானமும் சொல்லி, பக்காவாக பால் பொங்கும் போது ரிட்டன் ஆகி.. ஷப்பப்பா.. ஆண்கள் என்றால் அல்லோலகல்லோலப் படுவார்கள். பெண்கள் அதை மிக நேர்த்தியாகச் செய்வார்கள், அது இயல்பிலேயே அவர்களுக்கு வந்த கலை !

இன்றைக்கு அது அவர்களுக்கு அலுவலகத்திலும் கை கொடுக்கிறது. பல வேலைகளைத் திறம்பட செய்து முடிப்பவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். இடையில் 'ஃபிரிட்ஜ்ல இருக்கிற சிக்கனை எடுத்து வெளியே வெச்சுடு' என வாட்சப்பில் வீட்டுக்கு செய்தியும் அனுப்புகிறார்கள். சுருக்கமாய் சொல்ல வேண்டுமெனில், ஒரு காலத்தில் வீட்டை ஒரு சி.இ.ஓ போல இருந்து கண்காணித்துக் கொண்டிருந்தார்கள், இப்போது அலுவலகத்தை ஒரு வீடாகப் பாவித்து வேலை செய்கிறார்கள் !

## 2. கண்டாங்கிச் சேலை முதல் கலக்கல் கோட் வரை!

பெண்களின் ஆடை என்பது வெறும் அவர்களுடைய மானத்தை மறைப்பதற்கான விஷயம் அல்ல. அது ஒரு வகையில் அவர்களுடைய சுதந்திரத்தைப் பறைசாற்றும் இடமும் கூட. அவர்களுக்குப் பிடித்தமான சேலையை, பிடித்தமான வகையில் கட்டும்போது சுதந்திரம் பாதுகாக்கப்படுகிறது. இன்றைய நவீன உடைகளை அவர்களுடைய தேர்வுக்கு விடும்போது அவர்களுடைய சுதந்திரம் மதிக்கப்படுகிறது. அதற்காக ஆபாசத்தை நான் அனுமதிக்கிறேன் என்பதல்ல ! மாற்றத்தை மறுதலிக்கவில்லை என்பதையே கூறுகிறேன்.

ஏண்டி சேலையை விட்டுட்டு சுடிதாருக்கு மாறினே என்றார்கள், பின்னர் சுடிதாராவது பரவாயில்லை ஏன் ஜீன்ஸ் என்றார்கள், பிறகு ஜீன்ஸாவது பரவாயில்லை ஏன் கிழிஞ்ச ஜீன்ஸ் என்கிறார்கள். ஒவ்வொரு பரிமாணமும் கேள்விகளைக் கடந்தே பெண்களின் விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. பெண்களுடைய ஆடை இப்போது பேசுவது கண்ணியமோ பெண்ணியமோ அல்ல, அவர்களது அடையாளம்!

ஒரு மனிதனுடைய தன்னம்பிக்கை அவனது நேர்த்தியான, பிடித்தமான ஆடையில் இருக்கிறது என்பது உளவியல் உண்மை! பெண்களை அவர்களுக்கு பிடித்தமான ஆடை அணிய அனுமதித்தாலே அவர்களுடைய தன்னம்பிக்கை வளரும்.

## 3. மறுக்கப்பட்ட கல்வி முதல் அழைப்பு விடுக்கும் கல்வி வரை !

பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டது என்பது வரலாற்றின் மாபெரும் கறை. சொல்லப் போனால் பெண்களுக்கு மட்டுமல்ல, பிற்காலங்களில் சாதீய பிரிவுகள் கோலோச்சியபோது அடக்கப்பட்ட சமூகமும், படிக்க முடியாமல் தான் முடங்கியது. ஆதித் தமிழனின் அறிவு, பிற்காலங்களில் சிரச்சேதம் செய்யப்பட்டு ஆதிக்கத்தின் கைகளுக்குப் போனது. அதில் அதிகம் உதாசீனம் செய்யப்பட்டது பெண் கல்வி தான்.

இன்றைக்கு எவனும் கூப்பிடாவிட்டால் கூட ஆன்லைனில் அமர்க்களமாய்ப் படித்து, அட்டகாசமாய் பட்டம் வாங்க பெண்களால் முடியும். அலுவலகங்களில் இப்போது கையில் போனுடன் பறந்து திரியும் பட்டாம்பூச்சிகள் தான் அதிகம். அவர்கள் வாசிப்பது மட்டுமல்ல, எழுதுகிறார்கள். அவர்கள் படிப்பது மட்டுமல்ல, படைக்கிறார்கள்.

அதற்காக யாரும் பெண்களுக்கு ஸ்பெஷலாக எதையும் செய்து கொடுக்கவில்லை, தலைவர்களின் போராட்டம் தடைகளுக்கும் கொஞ்சம் விடை கொடுத்திருக்கிறது அவ்வளவு தான்

## 4. கடமை முதல் தேர்வு வரை !

ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் மிக முக்கியமான ஒரு நிகழ்வு என்றால் அது திருமணம் தான்.

17 ஆம் பக்கம் பார்க்க...



# பெண்கள் அன்றும்; இன்றும்

அந்தத் திருமணம் ஆணின் விருப்பப்படியும், பெண்ணின் விதிப் படியும் தான் நடந்து கொண்டிருந்தது. கழுத்தை நீட்டுவது பெண்களின் கடமை, திட்டம் தீட்டுவது ஆண்களின் உரிமை எனும் ஒரு கசப்பான காலம் இன்று விடை பெற்று விட்டது. எனது கடமையல்ல, எனது தேர்வே இங்கே முக்கியம் என்கின்றனர் பெண்கள். யாரும் கட்டாயத்துக்குக் கட்டுப்பட்டு கழுத்தை நீட்டுவதில்லை, நீட்டி விட்டோம் என்பதற்காக காலம் முழுதும் கட்டுப்பட்டு அடிமைப்படுவதும் இல்லை!

அன்றைக்கு காவியப் பெண் கற்பை நிரூபிக்க நெருப்புக்குள் அனுப்பி வைக்கப்பட்டாள். ஆனால் இன்றைய கலியுகப் பெண்கள், சர்தான் போடா என திரும்பி நடப்பார்கள். காரணம் அவர்களுக்கு பிறர் என்ன நினைப்பார்கள் என்பதை விட, நான் என்ன நினைக்கிறேன் என்பதே பிரதானமாகிவிட்டது ! அதுவே சிறப்பானதும் கூட.

### 5. கஜல் கண்கள் முதல் இன்ஸ்டா ஃபில்டர் வரை!

அலங்காரம் எல்லோருக்கும் பிடிக்கும், அலங்காரத்துக்குப் பெண்களைத் தான் பிடிக்கும். உலகில் எத்தனை அழகிகள் உண்டோ அவர்கள் எல்லாம் நாலு லாரி சுமக்குமளவுக்கு அழகுசாதனப் பொருட்களும் உலகில் உண்டு. முன்பெல்லாம் அழகு சாதனப் பொருட்கள் செயற்கையாய் இருக்கவில்லை, இயற்கை அழகை இயற்கையே மெருகூட்டியது. மஞ்சளோ, மருதாணியோ, கருப்போ எல்லாமே இயற்கையின் கைகுலுக்கலில் நிகழ்ந்தவையே. இப்போது பெண்களின் கைப்பைக்குள் ரசாயன ரசனைகளே நிரம்பியிருக்கின்றன அழகை மறைத்து வைக்க வேண்டுமென யாரும் இப்போது விரும்புவதில்லை, மேலும் அழகாய்க் காட்டும் ஃபில்டர்களுடன் இன்ஸ்டா பக்கங்களில் இளமை விதைக்கிறார்கள். சமூக வலைத்தளங்களில் கதைக்கிறார்கள். அப்போதெல்லாம் எண்ணை தேய்ப்பது அழகுக் குறிப்புகளில் ஒன்று, இப்போது எண்ணை விலக்குவது அழகுக் குறிப்புகளில் ஒன்று. எதுவுமே எல்லைக்குள் இருக்கும்போது ஆரோக்கியம் காக்கப்படும். ஹை ஹீல் செருப்புகள் முதுகெலும்பை சேதமாக்கும், உதட்டுச் சாயங்கள் புற்று நோய்க்கு புள்ளி வைக்கும், முகப்பூச்சுகள் தோலை நிர்மூலமாக்கும் எனும் உண்மையான மருத்துவ எச்சரிக்கைகளைக் கொஞ்சம் கவனிப்பது நலம்.



### 6.அடையாளம் சுமந்தவள் முதல் அடையாளம் அளிப்பவள் வரை!

முன்பெல்லாம் பெண்களை அடையாளப்படுத்துவதற்கு ஒரு ஆணோ, அல்லது ஒரு வீடோ, அல்லது ஒரு குடும்பமோ தேவைப்பட்டது. முத்துவேலின் மகள், பெரிய வீட்டு மருமகள் என்று ஏதோ ஒரு அடைமொழியால் தான் பெண்கள் அறியப்பட்டார்கள். ஆனால் இன்று அடையாளங்களை அளிக்கும் இடத்துக்கு பெண்கள் வந்திருக்கிறார்கள். பெண்களை வைத்து இடங்கள், அலுவலகங்கள், வேலைகள், சாதனைகள் எல்லாமே அறியப்படுகின்றன.

ஒரு காலத்தில் மனைவி, மகள், அம்மா, பாட்டி என அறியப்பட்டவர்கள் இன்று ஜனாதிபதி, விண்வெளி வீராங்கனை, மேலதிகாரி என்றெல்லாம் அறியப்படுகிறார்கள். அடையாளங்களைச் சுமப்பது தவறில்லை, அவை நமது தனி அடையாளங்களை அழிப்பதாய் இருக்கக் கூடாது. ஒருவரின் மனைவி என்பது பெருமையே, ஆனால் அந்த மனைவியின் தனித்துவமும் அங்கே காக்கப்பட வேண்டும் இல்லையா ?

### 7. ஒடுக்கப்பட்ட குரல் முதல் ஓங்கி ஒலிக்கும் குரல் வரை!

அன்று, அடைக்கப்பட்ட கதவுகளுக்குள் தான் பெண்களின் குரல்களுக்கு விடுதலை இருந்தது. சாத்தப்பட்ட சன்னல்களின் உள்ளே தான் அவர்களுடைய சுதந்திரம் சுற்றிக் கொண்டிருந்தது. சற்று சத்தமாய்ப் பேசிவிட்டால் கூட அது பெரும் குற்றமாய்ப் பார்க்கப் பட்டது. பெண்கள் சிரிப்பது வெளியே கேட்கக் கூடாது என்று கூட பழமொழி இருந்தது.



ஆனால் இன்று மேடைகளில் கர்ஜிக்கும் பெண் சிங்கங்கள் எக்கச்சக்கம். அலுவல் கூடுகைகளில் பெண்களில் தொழில்நுட்ப உரைகள் மிகப் பிரபலம். அரசியல் அரங்குகளில் அவர்களுடைய துணிச்சல் மிக வியப்பு. ஒரு காலத்தில் 'பெண்கள் பேச்சை கேக்காதீங்க' என்றார்கள். இன்றைக்கோ மில்லியன் ஃபாலோயர்களுடன் அவர்கள் டிஜிடல் மேடைகளை ஆட்சி செய்கிறார்கள்.

### கடைசியாக,

பெண்களின் அன்றைய வாழ்க்கையிலும் இன்றைய வாழ்க்கையிலும் நிறைய வேறுபாடுகள் உண்டு. அவையெல்லாம் அவர்களைச் சுற்றியிருந்த சமூகம் அவர்களுக்கான சுதந்திரத்தைக் கொடுத்ததன் விளைவு. அவர்கள் தங்கள் உரிமையை மீட்டுக் கொண்டதன் வெளிப்பாடு. ஆனால் அவர்களுடைய குணாதிசயமான அன்பு, மென்மை, தாய்மை போன்றவை எல்லா காலங்களிலும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

அடையாளங்கள் மாறலாம், வாழ்க்கை முறை மாறலாம், அங்கீகாரங்கள் மாறலாம். அந்த அழகிய பெண்மையில் இயல்பு மாறாதவரை பெண்கள் மண்ணின் அன்னையரே.அன்றும், இன்றும், என்றும்!

அனைவருக்கும் இந்த சகோதரனின் பெண்கள் தின நல்வாழ்த்துகள்.

# யேர்மனி கஸ்ரொப் – றவுக்சல் தமிழாலயத்தில் தைப்பொங்கல் விழா!










**18.01.2025 அன்று யேர்மனி கஸ்ரொப்- றவுக்சல் தமிழாலயத்தில் சிறப்பாக நடைபெற்ற பொங்கல்விழாவின் நிழற்படத்தொகுப்பு.**

செய்தி.தகவல்
சக்தி-ஜெயா
( வெற்றிமணி )



# நெல் களஞ்சியசாலைகளையும் வைக்கோலால்தான் நிரப்ப வேண்டும்



புனித பிரியா
(இலங்கை)

உண்மையாகவே நாம் சுதந்திரமாகத்தான் வாழ்கிறோமா? வேறு எதில் இருந்து விடுதலை பெற்றிருந்தாலும் வாழ்க்கைச் செலவிலிருந்து நாம் இன்னும் விடுதலை அடையவில்லை. இதன் காரணமாக பலரும் பசி, பட்டினியோடு தான் இருக்கிறோம். அரசியல்வாதிகளுக்கு இலங்கையில் அரிசி பிரச்சினை இல்லை. தேங்காய் பிரச்சினையும் இல்லை. இந்த நாட்டின் மிகச்சிறந்த விவசாயியாகக் கருதப்படக்கூடிய விவசாய பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன, ஒரு பெரிய நெருக்கடியில் சிக்கியுள்ளார். அவரால் இன்னும் நெல்லுக்கு உத்தரவாத விலையைப் பெற முடியவில்லை. அரசாங்கத்தில் யாரிடம் கேட்டாலும், அவர்கள் அனைவரும் அடுத்த சில நாட்களில் நெல் கொள்முதல் செய்வதற்கான அரசாங்கத்தின் உத்தரவாத விலை அறிவிக்கப்படும் என்று கூறுகிறார்கள். ஆனால் இந்த நாள் எப்போது வரும் என்று சொல்ல முடியாது.

தமிழ், சிங்களப் புத்தாண்டுக்கு முன்னர் அரசாங்கத்தைக் கவிழ்ப்பது பற்றி சிலர் கூறும் கதையைப் போலவே இதுவும் உள்ளது. தமிழ், சிங்களப் புத்தாண்டு என்று சொன்னாலும், அது எந்த வருடம் வரும் புத்தாண்டு என்று சொல்லவில்லை. நெல்லுக்கான உத்தரவாத விலை பிரச்சினை காரணமாக இலங்கை விவசாயிகள் மிகவும் மோசமான சூழ்நிலைகளை எதிர்க்கொண்டுள்ளனர். அரசாங்கம் சொல்வதைக் கேட்டுக்கொணைடு ஊடக சந்திப்பு நடத்திவிட்டு, நாட்டிற்குத் தங்கள் குறைகளைப் பற்றிக் கூறி மௌனமாக இருப்பது நமது விவசாயிகளின் வழக்கமாகி விட்டது. இப்போது, இந்த நாட்டிலுள்ள நான்கு அல்லது ஐந்து பெரிய அரிசி ஆலை உரிமையாளர்கள் நேரடியாக வயல்களுக்குச் சென்று அதிக விலைக்கு அரிசி வாங்கத் தொடங்கியுள்ளனர். அரசாங்கம் நெல்லுக்கு உத்தரவாத விலையை அறிவிக்கும் நாள் வரும்போது, வைக்கோல் மட்டுமே மிஞ்சியிருக்கும். எனவே, அரசின் அனைத்து நெல் களஞ்சியசாலைகளையும் வைக்கோலால்தான் நிரப்ப வேண்டும். இந்த நாட்டில் அரசாங்கத்தை அமைப்பது மிகவும் கடினமான பணி என்பது உண்மை தான். இந்த நாட்டில் உள்ள 22 மில்லியன் மக்கள், ஒரே திசையில் நகர்வதற்குப் பதிலாக வெவ்வேறு திசைகளில் நகர்ந்து, நகர்ந்து தாமதப்படுத்தி, ஆமை வேகத்தில் செல்லப் பழகிவிட்டனர். இதனால் நாட்டை நிர்வகிப்பது மிகவும் கடினமாகிறது.நாம் வாய் திறந்தாலே 2500 ஆண்டுகால வரலாற்றைப் பற்றிப் பேசப் பழகிவிட்டோம். ஆனால் ஒரு அவசரத்திற்கு யாரிடமும் கையில் 500 ரூபாய் கூட இல்லை. அப்படியானால் 2500 ஆண்டுகால கலாச்சார த்தை பற்றி பேசுவதில் என்ன பயன்? நாம் முதலில் செய்ய வேண்டியது அரசாங்கத்தைக் கவிழ்ப்பது அல்ல, மக்கள் குழியில் விழுவதைத் தடுக்க வேண்டும்.



கடந்த ஆண்டு, ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் கடந்த ஆண்டு ஜனவரியில் நெல்லுக்கு உத்தரவாத விலையை அறிவித்தது. அதன்படி, 14% ஈரப்பதம் கொண்ட ஒரு கிலோ நாட்டரிசி நெல்லின் விலை ரூ. 105, ரூபாவாகவும், அதே ஈரப்பதம் கொண்ட ஒரு கிலோ சம்பா அரிசி நெல் 120 ரூபாய்க்கும், ஒரு கிலோ கீரி சம்பா நெல்லை ரூ.130க்கு கொள்வனவு செய்யத் தயாராக இருப்பதாக அரசு அறிவித்திருந்தது. 14% க்கும் அதிகமான ஈரப்பதம் கொண்ட நாடு, சம்பா மற்றும் கீரி சம்பா நெல்லின் விலை ரூ. 90, ரூ. 100, 120 ரூபாய் விலையில் வாங்க அரசாங்கம் இணக்கம் தெரிவித்திருந்தது. அத்துடன், நெல் ஆலை உரிமையாளர்களுக்கு நெல் கொள்வனவு செய்வதற்கு 50 மில்லியன் ரூபாயும், நெல் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு 25 மில்லியன் ரூபாயும் வழங்க அந்த அரசாங்கம் ஒப்புக்கொண்டது.



இந்தப் பணம் அனைத்தும் தனியார் மற்றும் அரசு வங்கிகளால் வழங்கப்பட்டது. இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, நெல்லுக்கு கிலோவு க்கு ரூ.150 உத்தரவாத விலை வழங்குவ தாகக் கூறியிருந்தது.


இருப்பினும், எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கூறுவது போல், இந்த அரசாங்கத்தால் உத்தரவாத விலையை நிர்ணயிப்பதன் மூலம் விவசாயிகளின் உரத்திற்கு பணம் கூட வழங்க முடியாது. அரசாங்கம் ஒரு பெரிய பொருளாதார சிக்கலில் சிக்கித் தவிக்கிறது என்பதை நாங்கள் அறிவோம். இது மிகவும் கடினமான சூழ்நிலை. உலகின் பிற நாடுகளும் பொருளாதார நெருக்கடியை நோக்கிச் செல்கின்றன. எனவே, நாங்கள் முன்னர் போல தான் தோன்றித்தனமாக கடன்களைப் பெற முடியாது. மேலும், வெளிநாடுகளில் இருந்து பெறப்பட்ட கடன்களுக்கான தவணைகள் மற்றும் வட்டியை செலுத்த இயலாமல் போனதின் காரணமாக, கடந்த காலங்களில் நாடுகள் நமக்குக் கடன் வழங்க அதிக விருப்பம் கொள்ளவில்லை. சில நாடுகள் இந்த நேரத்தில் மிகப்பெரிய இலக்குகளை மனதில் நிறுத்திக்கொண்டு தான் நமக்குக் கடன் வழங்குகின்றன. ■

28 ஆம் பக்கம் பார்க்க...










# பாலியும் பாசிபடர்ந்த சிலைகளும்!

மாதவி (யேர்மனி)

நாம் அண்மையில் சென்ற பல்கேரியாவில் முழத்திற்கு ஒரு ATM இருந்தது. பாலியில் முழத்திற்கு ஒரு கோவில். கோவில் என்றால் சொரூபம் இருக்கும் என்று இல்லை. ஒரு கதிரை போன்ற இருப்பு இருக்கும், அதில் காலையில் தமக்கு விரும்பிய உணவு ஒரு தென் ஒலையில் பின்னிய தட்டில் படைப்பார்கள்.

அதனை விட பல கோவில்கள், இராமர், விஸ்ணு, பிள்ளையார், உருவங்களுடன் அமைந்த கோவில்களும் உண்டு.

இந்தியாவில் கருங்கல்லில் ஆனா சிற்பங்கள் அதிகம். இங்கு பாலியில் சுண்ணாம்புக் கல், அல்லது சுண்ணம் (சீமந்துபோல்) இவற்றாலானதாகவே பல இருக்கும். கற்சிற்பங்களும் சில இடையிடையே உண்டு. எழுதாத விதியாக இந்தச் சிலைகள், வர்ணம் பூசாமல் பாசிபிடிக்கவே விட்டும் இருப்பார்கள்.



பழைய சிற்பம், கோவில் என்பதனை பாசிபிடித்த சிலைகள் மூலம் காணலாம். எமக்கு அழகான வேலைப்பாடுகள் உடன் பார்த்து பழகியமையால் பாசிபடர்ந்த சிற்பங்கள் கவர்வதாக இல்லை, அத்துடன் அனைத்து சிற்பங்களும், சீனா, தாய்லாந்து மக்களின் கலைத்துவம் கலந்த ஒருவித சிற்பங்களாகவே. காணப்படும். பாம்பு சிங்கமுகம்,யாழி போன்ற தலைகளுடன் பல பாசிபடர்ந்த சிற்பங்கள் தெருத் தெருவாக இருக்கும். மேலும் பழைய சுற்றுலாத் தலங்களில், புதிய சிற்பங்கள் முழு வர்ணம் பூசப்பட்ட சிலைகளும் சில காணப்படுகின்றன. நடனங்கள், இசைக்கருவி வாசிக்கும் சிற்பங்கள் என பல காணப்படுகின்றன. பிரமாண்டமான கருடன் சிலை, விஸ்ணு சிலைகளும் இராமர் சிலைகளும் பாலிக்கு வருபவரை கவரும் வண்ணம் உள்ளது.

நாம் நின்ற விடுதிக்கு பெயர் வனராசா. யேர்மனியல் 40 வருடங்களுக்கு முன் எம்மோடு வசித்த நண்பர் திரு. இரத்தினம் கருணாரத்தினம்பாலிபாரப்பதற்கான ஒழுங்குகள் சிறப்பாகச் செய்து எம்மோடும் குடும்பமாகக் கூடவும் வந்தனர். தற்போது அவர்கள் லண்டனில் வசித்துவருகின்றனர். அவர்களுக்கு பாலி இரண்டாவது பயணம்.




# ஒத்திகை





பாரம்பரிய பாலி நடனங்கள் வார நாட்களில் பாலியில் நகரமண்டபத்திலும், கோவில்களின் முன்பும் இடம் பெறும்.

நூற்றுக்கணக்கான உல்லாசப் பயணிகளும் பார்த்து மகிழ்வார்கள். மாலையில் இடம்பெறும் நடனத்திற்கு ஒத்திகை காலையில் கட்டாயமாக இடம் பெறும். எத்தனை தடவை மேடை ஏறினாலும் ஒத்திகையின்றி ஏறுவது கிடையாது. சிறுவர்களாக இருந்தாலென்ன பெரியவர்களாக இருந்தால் என்ன ஒத்திகை ஒத்திகை தான்.

மாலையில் அரங்கேற உள்ள நடன நிகழ்ச்சிக்கு ஒத்திகை நடைபெறுவதை படத்தில் காணலாம். மாணவிகள், மாணவர்கள் சுட்டித்தனமாக இருந்தாலும், அமைதியாக பயில்வார்கள். நடன ஒத்திகையின்றி ஒரு போதும் மேடையேறுவதில்லை.

குருவிற்கு மாணவர்கள் பணிவாக நடப்பதைக்காண முடிகிறது. ஒத்திகையின் போது பெற்றவரும் சூழ்ந்து இருந்து தமது பிள்ளைகளை பார்க்கின்றார்கள். அவர்கள் கலை மீது கொண்ட பற்றுக்கு அவர்களது முகங்களின் மலர்ச்சியே சாட்சி.





மங்கல இசைக்குழு

உங்கள் அனைத்து மங்கள வைபவங்களையும்
நாதஸ்வர தவில் கானமழையில் நனைத்திட
தவில் மேதை அளவையூர்
குமரகுரு அவர்களின் புதல்வன்
நாதஸ்வர இன்னிசைச் செல்வன்




N.K.Raguraman
Dresdener
Str.6 50126
Bergheim
Germany
Tel: 0049 157 89 15 95 71
0049 2271 670236 | 0049 160 91146240

# பெண்விடுதலை பற்றிய பாரதியின் நோக்கு

பாரதியார் பெண்கள் விடுதலையே நாட்டுவிடுதலை – மானுடவிடுதலையின் வேர் என்ற கருத்தை மையமாகக் கொண்டிருந்தார் என்பது ஆழமாகப் பாரதியைப் படிப்போர்க்குத் தெளிவாகும். நாட்டு வணக்கம் எனப்பாடப்பட்ட ”எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே – அதன் முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்ததும் இந்நாடே” என்ற பாடலிலும் கூட

**இன்னுயிர் தந்தெமை**
**ஈன்று வளர்த்தருள்**
**ஈந்ததும் இந்நாடே – எங்கள்**
**அன்னையர் தோன்றி மழலைகள் கூறி**
**அறிந்ததும் இந்நாடே – அவர்**
**கன்னியராகி நிலவினிலாடிக்**
**களித்ததும் இந்நாடே – தங்கள்**
**பொன்னுடல் இன்புற நீர் விளையாடி**
**இல் போந்ததும் இந்நாடே**
**மங்கையராயவர் இல்லறம் நன்கு**
**வளர்த்ததும் இந்நாடே**

என்று பெண்மையின் சிறப்பை பேசி நிற்கிறார் பாரதியார்.

பாரதி பேசும் பெண்விடுதலை என்பது மனித குலத்திற்கான விடுதலை. பெண்ணடிமைத் தனத்திற்கு எதிரான பாரதியின் சீற்றம் பெண்களை மட்டும் பாதுகாக்கும் – பெண்களைக் கரையேற்றிவிடும் குறுகிய நோக்குடையதல்ல. அப்படியிருந்திருந்தால் அதுகூட ஒருவகையான அடிப்படைவாதமாகியிருக்கும். பாரதியின் பெண்விடுதலை – அடிமைத் தனத்திலிருந்தான மீட்சி என்பது முழு மனித குலத்தையும் வாழ்விக்க எண்ணும் மாண்புயர்நோக்கு அது. ஆணும் பெண்ணும் சமமாக வாழாவிட்டால் வீட்டிலும் நாட்டிலும் அமைதியிராது. மனிதகுல வாழ்க்கை சிறக்காது. என்ற ஆழமான சமூகவியலையும், மானிடவியலையும் காட்டுவதே பாரதியின் நோக்கமாக இருந்திருக்கிறது.

பெண் எனும் கழனிக்கு விடுதலை எனும் நீர் இல்லையென்றால் பின்னிந்த உலகினிலே மனித குலத்தின் வாழ்க்கையெனும் வேளாண்மை இல்லை என்ற கவலையே பாரதியை அரித்தெடுத்த பெருங்கவலை. அதனால்தான் பாரதி

**“பெண்ணுக்கு விடுதலையென்**
**றிங்கோர் நீதி**
**பிறப்பித்தேன் அதற்குரிய**
**பெற்றி கேளீர்**
**மண்ணுக்குள் எவ்வுயிரும் தெய்வ**
**மென்றால்,**



**மனையாளும் தெய்வமன்றோ?**
**மதிகெட்டீரே!**
**விண்ணுக்குப் பறப்பதுபோல்**
**கதைகள் சொல்வீர்,**
**விடுதலையென் பீர் கருணை வெள்ள**
**மென்பீர்,**
**பெண்ணுக்கு விடுதலை**
**நீரில்லை யென்றால்**
**பின்னிந்த உலகினிலே**
**வாழ்க்கை யில்லை.**

என்று கொஞ்சம் கோபத்தோடு – கேட்பவன் தலையில் மெல்ல ஒரு குட்டுக் குட்டி உலக வாழ்க்கை செழிக்க பெண் விடுதலையின் அவசியத்தை அழுத்தமாகச் சொல்கிறான்.

பெண் அடிமைப்பட்டு விட்டால் முழு மனிதகுலமும் அடிமைப்பட்டு விடுமே என்ற ஏக்கமும், ஆதங்கமும் பாரதியிடம் மேலோங்கி நின்று அவரைத் துணுக்குற வைத்தன. பெண் என்பதை வெறுமனே மனைவி (பெண்டாட்டி) என்பதாக மட்டும் எண்ணி முழுப்பெண்களையும் அடிமைகளாக்கி மனித குலத்தை அடிமைக் குலமாக்கி விடாதீர்கள் என்ற எச்சரிக்கை பாரதியிடம் மேலோங்கியிருந்தது. அதனால்தான்

**தாய்க்குமேல் இங்கேயோர் தெய்வ**
**முண்டோ?**
**தாய்பெண்ணே யல்லளோ?**
**தமக்கை,தங்கை**
**வாய்க்கும்பெண் மகவெல்லாம்**
**பெண்ணே யன்றோ?**
**மனைவியொருத் தியையடிமைப்**
**படுத்த வேண்டித்**
**தாய்க்குலத்தை**
**முழுதடிமைப் படுத்த லாமோ?**
**“தாயைப்போ லேபிள்ளை” என்று**
**முன்னோர்**
**வாக்குளதன் றோபெண்மை**
**அடிமை யுற்றால்**
**மக்களெலாம் அடிமையுறல்**
**வியப்பொன் றாமோ?**
**என்று புத்தியில் உறைக்கும்படி**
**பக்தியின் சாயல்கூட்டி பேசுகிறார்.**
**ஆணும் பெண்ணும் சமமாக**
**வாழாவிட்டால், வீட்டிலும்,**
**சமூகத்திலும், நாட்டிலும் – முழு**
**மனித சமுதாயத்திலும்**
**அமைதி இராது. மனித குல**
**வாழ்க்கை சிறக்காது. அதனால்–**
**தான் வையம் தழைக்கும் வழியாக**
**பெண்விடுதலையைப்**
**பேசுகிறார் பாரதியார்.**
**ஆணும் பெண்ணும்**
**நிகரெனக் கொள்வதால்**
**அறிவி லோங்கி, இவ் வையம்**
**தழைக்குமாம்**



சிவராஜா சிவார்த்தன்
யா/தெல்லிப்பழை
மகாஜனக் கல்லூரி
தரம்– 12
(விஞ்ஞானப்பிரிவு)

**பூணு நல்லறத் தோடிங்குப்**
**பெண்ணுருப்**
**போந்து நிற்பது தாய்சிவ சக்தியாம்**
**நாணும் அச்சமும் நாய்கட்கு**
**வேண்டுமாம்**
**ஞான நல்லறம் வீர சுதந்திரம்**
**பேணு நற்குடிப் பெண்ணின்**
**குணங்களாம் – என்று**
**நயமாக புத்திமதியும் சொல்கிறார்.**

**பட்டங்கள் ஆள்வதும்**
**சட்டங்கள் செய்வதும்**
**பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்**
**எட்டு மறிவினில்**
**ஆணுக்கிங்கே பெண்**
**இளைப்பில்லை காணென்று**
**கும்மியடி.**
**காதலொருவனைக்**
**கைப்பிடித்தே, அவன்**
**காரியம் யாவினும் கைகொடுத்து**
**மாத ரறங்கள் பழமையைக் காட்டிலும்**
**மாட்சி பெறச்செய்து வாழ்வமடி!**
**புதுமைப் பெண்ணிவள்**
**சொற்களும் செய்கையும்**
**பொய்ம்மை கொண்ட**
**கலிக்குப் புதிதன்றிச்**
**சதுமறைப்படி மாந்தர் இருந்தநாள்**
**தன்னி லேபொது வான் வழக்கமாம்**
**மதுரத் தேமொழி**
**மங்கையர் உண்மைதேர்**
**மாத வப்பெரி யோருட னொப்புற்றே**
**முதுமைக் காலத்தில்**
**வேதங்கள் பேசிய**
**முறைமை மாறிடக் கேடு**
**விளைந்ததாம்.......**

என்று பேசுகின்ற பாரதி பெண்கள் விடுதலை பெறுவது – கல்வியறிவில் சமத்துவம் காண்பது தொன்மை அறங்களை – பண்பாட்டினைப் பாதிப்பதல்ல அவற்றை மேலும் மாட்சி பெறச் செய்யும் என்று சமூகக் கரிசனைக்கும் பதில்சொல்லி பெண்கல்வியினால் மனித குலம் செழிக்குமென உத்தரவாதமளிக்கிறார். பெண்கள் கல்வி பெறுவதென்பது ஒரு சமூதாய த்தின் அத்திபாரம் என்றும், சமுகத்தை தழைக்க வைக்கும் செழிப்பான நிலம் பெண்ணென்றும் உறுதியாக நம்பி அதனையே உரைத்தவர் பாரதியார். தாயைப்போல பிள்ளை என்ற மரபு விளக்கத்தை விளக்கி உரைக்கும் பாரதி

28 ஆம் பக்கம் பார்க்க...





# பகுத்தறிவு என்பது தனியே கடவுட்கோட்பாட்டை முறியடிப்பதல்ல

**ஏன்** என்று கேட்காதுவிட்டால், மடையர் நாம் என்று கட்டிவிடும் அறிவு. நாம் ஆறறிவு மனிதர்களா? இல்லையெனில் 5 அறிவு மிருகங்களா? என்று புரியாது போய்விடும். மிருகங்கள், பறவைகள் பலவற்றின் குணநலங்களை எடுத்தாராயும்போது அவையே தம் வாழ்வுக்குத் தேவையான அறிவு கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. தலையாட்டித் தொடரும் ஆட்டு மந்தைகள் போல் வழிவழியாகத் தொடரும் பழக்கவழக்கம் என்றோ, ஊரோடு ஒத்தோடாவிட்டால், யதார்த்தவாதி சமூகவிரோதி என்பதற்கமைய சமூகம் எம்மை ஒதுக்கிவிடும் என்றோ, ஆச்சரியமானதாக இருக்கின்றது என்றோ, எல்லோரும் ஏற்றுக் கொள்ளுகின்றார்களே! அதில் ஏதோ உண்மை இருக்கும் என்றோ எதையும் நம்பிவிடக்கூடாது.

*கொல்லா நலத்தது*
*நோன்மை பிறர்தீமை*
*சொல்லா நலத்தது சால்பு*

தவம் என்று சொல்லப்படுவது கொல்லாத நலத்தை அடிப்படையாகக் கொண்டது. சால்பு எனப்படுவது பிறரது குற்றங்களை எடுத்துச் சொல்லாத நலத்தை அடிப்படையாகக் கொண்டது சால்பு என்று வள்ளுவர் கூறிவிட்டார் என்பதற்காக அவர் கூறிய எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் என்னும் குறளை நாம் மறந்துவிடக்கூடாது. தீமை கண்டு குற்றங்களையாது எடுத்துச் சொல்லித் திருத்தாது. போனால் போகட்டும் என்று நாம் வாழ்ந்தோமேயானால், வாழிடச் சாக்கடையுள் நாமும் புரண்டே எழவேண்டியவர்கள் ஆகிவிடுவோம்.

பொருட்கள் நிகழ்வுகளின் கருத்துக்களின் கூறுகளை அவதானித்து ஆய்ந்து அவற்றின் இயல்புகளில் இருந்து ஆதாரபூர்வமாக நிரூபிக்கக்கூடிய முடிவுகளை முன்வைக்கும் வழிமுறையையும் அதை ஏதுவாக்கும் மனித அறிவு ஆற்றலையும் குறிக்கின்றது. மெய்ப்பொருளை அல்லது உண்மையைக் கண்டறிவது என பகுத்தறிவு பற்றி அறிகின்றோம். பெரியார் அறிவு எனப்படுவதே பகுத்தறிவுதான் என்கிறார்.



கௌசி சிவபாலன்
(யேர்மனி)

சைவசமயத்தில் சந்தேகம் தோன்றியபோதே சைவசித்தாந்தம் தோன்றியது. இவ்வாறு சந்தேகங்கள் தோன்றும் போதே அவற்றுக்கான தெளிவும் ஏற்படுகின்றது.

2500 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய புத்தர் கடவுளாவது ஆத்மாவாவது இவையெல்லாம் சுத்தப்புரட்டு. எதையும் அறிவு கொண்டு சிந்தித்துப் பார்த்து புத்திக்கு எது சரியென்று படுகின்றதோ அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமே அன்றி கடவுள் சொன்னார் முன்னோர்கள் சொன்னார்கள் என்பதற்காக ஏற்றுக் கொள்ளாதே. வெகுகாலத்திற்கு முன் சொல்லப்பட்ட கருத்தாயிற்றே. வெகுகாலமாகப் பின்பற்றிவந்த கருத்தாயிற்றே என்பதற்காக ஏற்றுக்கொள்ளாதே. அறிவு கொண்டு அலசிப்பார் எது உன்புத்திக்குச் சரியென்று படுகிறதோ அதனை ஏற்றுக்கொள்



என்று அறிவைப் பயன்படுத்த வேண்டிய அவசியத்தைக் கூறியுள்ளார்.

இவ்வாறு பெரியார் அவர்களும் கடவுள் பற்றி எண்ணற்ற வினாக்கணைகள் தொடுத்துச் சென்றுள்ளார். விஞ்ஞானிகளும் விண்முட்ட ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுக் கொண்டே இருக்கின்றனர். இயற்கையின் பலபக்கப் பரிமாணங்களை ஆராய்ச்சிகளில் தெளிவுபடுத்திக் கொண்டுதான் இருக்கின்றனர்.

ஆனால், பகுத்தறிவாளர்கள் எனக் கருதப்படுவோர் பலர் தனியே கடவுள் இல்லை என்று வாதிடுவது மட்டுமே பகுத்தறிவு என்று கருதிக் கொண்டிருப்பது ஆச்சரியத்துக்குரிய விடயமாகின்றது. நம் அறிவுக்குப் புலப்படாத விடயம் எதுவாக இருந்தாலும் அதை அறிந்து கொள்ளத் தேட முற்படுவதும், நடந்து கொண்டிருக்கும் சில விடயங்களை அப்படியே ஏற்றுக் கொள்ளாது அதற்குரிய உண்மை காரணத்தைத் தேடிக் கொள்ள முனைவதும் அவசியமல்லவா? எதிரியாக எம் கண்ணுக்குப் புலப்படுபவன் வேறு பலர் கண்களுக்கு நல்லவனாகத் தெரிவதும், நல்லவன் என்று நாம் ஏற்றுக் கொள்பவன் பலர் கண்களுக்குத் துரோகியாகப் புலப்படுவதும் நோக்கி அதுபற்றி ஏன் என்ற கேள்வியை முன்வைத்து ஆராய்ந்து பார்ப்பதும் ஒரு பகுத்தறிவின் பாற்படுகின்றது. ஏனெனில் பொய்க் கருத்துக்களை முன் வைப்பவர்கள் தம்முடைய சொல் ஆற்றலினால், உண்மை அல்லாதவற்றையும் உண்மை போலவே சொல்லி விடுவார்கள். இதனையே வெற்றி வேற்கையிலே அதிவீரராம பாண்டியர்

*பொய்யுடைய ஒருவன்*
*சொல் வன்மையினால்*
*மெய் போலும்மே மெய் போலும்மே*
*மெய்யுடைய ஒருவன்*
*சொல மாட்டாமையினால்*
*பொய் போலும்மே பொய் போலும்மே*

என்று சொல்லிப் போனார்.

18ஆம் நூற்றாண்டிலே வாழ்ந்த சீர்காழி அருணாசலக்கவிராயர் நடகத்தமிழுக்கு உயிரளித்தவர். இவர் சிந்திக்கப் பல பாடல்களை யாத்துள்ளார்

*மிகப்பட்ட வெம்பசியால்*
*வெம்பருந்தின் வாயில்*
*அகப்பட்ட கோழிப்பார்ப்*
*பானேன் - நகப்பட்ட*
*கல்லையோ கைதொழுதேன் காக*
*மணு காமலையில்*
*இல்லையோ ரத்னகிரியே*

அளவுகடந்த பசியால் மிகக் கொடிய பருந்தின் வாயில் கிடைத்த கோழிக்குஞ்சு போலானேன். யான் கல்லையா கடவுள் என்று கும்பிட்டேன். இல்லையே காகமும் அணுகாத இரத்னகிரி மலையை அல்லவா நானும் வணங்கினேன்.

28 ஆம் பக்கம் பார்க்க...




சர்வதேச பெண்கள் தின வாழ்த்துகள் (பங்குனி 08)




# நவயுகாவின் மன்மதம் நீ, வனயட்சி நூல் வெளியிட்டுகள்

நவயுகா குகராஜா வணிகமாணிப் பட்டப்படிப்பை முடித்தவர். ஈழத்தின் தேசிய பாடசாலைகளில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப ஆசிரியையாகக் கடமையாற்றிப் பின்னர் தமிழ் சினிமாவில் இயக்குநராகவும் நடிகையாகவும் செயற்பட்டு வருகிறார்.

நவயுகா குகராஜாவின் முதலாவது கவிதைத்தொகுப்பு உயிர் உடையும் ஓசைகள் 2010 ம் ஆண்டு வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தால் வெளியீடு செய்து வைக்கப்பட்டது. இரண்டாவது கவிதைத் தொகுப்பு சூர்ப்பனகையும் ஒரு பவளத்தீவும் வாசகசாலை பதிப்பகத்தினால் 2023 ல் வெளியீடு செய்து வைக்கப்பட்டது. நவயுகாவின் மன்மதம் நீ, வனயட்சி ஆகிய தொகுப்புகள் கடந்த வருடம் வெளியாகி இருந்தது.

பொட்டு, பெட்டைக் கோழி கூவி , வாகை, சிவப்புப் பெட்டி ஆகிய குறும் படங்களையும் கடவுளின் நிலம் உட்பட பல ஆவணப் படங்களையும் இயக்கிய இவரின் 'பொம்மை' திரைப்படம் 2025 ல் திரைக்கு வரவிருக்கிறது.

இங்கே மன்மதம் நீ, வனயட்சி நூல் வெளியிட்டு விழாக்காட்சிகள் கவிதைகள் சில.

--------------------------------

**மிகச் சிறந்த இதயத்தைக் கண்டடதைல்**

ஒரு நல்ல காதல் பெரும் காத்திருப்புக்கும் பல தவறான காதலர்கள் கொடுத்த அனுபவங்களிற்குப் பின்னர் மாறுவேடத்தில் வரும் அதிஷ்டத்தைப்போல வந்து சேர்க்கிறது. ஒரு நல்ல காதலென்பது பேறு! கடுந்தவத்தின் பின்னரான வரம்!

"மன்மதம் நீ" காதலின் வலிகளைச் சுகமாக்கிய காதலைக் கொண்டாடும் இதயங்களுக்கானது. உங்கள் உண்மையான காதல் நிராகரிக்கப்பட்டு விட்டதா? நீங்கள் தூக்கி எறியப்பட்டு உடைந்து போய் கிடக்கிறீர்களா? இது உங்களுக்கான நேரம்.. உங்கள் இதயத்திற்குப் பொருந்தும் மிகச் சிறந்த இதயத்தைத் கண்டடையும் வரை மீண்டும் மீண்டும் காதலியுங்கள்!

--------------------------------

காதல் இயற்கையின் அழைப்பு!
காதல் ஒரு கருவியாகி காயத்தின்
விந்தைகளை
புரியும் படி சொல்லக்கூடிய
இலகுபடுத்துவோன்!
காதல் அனந்தத்தை அடையப்
பயணப்படும்
ஆத்மாவின் முதல் முயற்சி!
இருமை கடந்து ஒருமையைச் சுவைக்கத்
தொடங்கும் போது
சுதந்திரத்தைக் கண்டடைய முடிவதால்
காதல் செய்யுங்கள்!
காதல் பேரின்பத்தை அடையும்
பாதைக்கான முதல் கதவு!

--------------------------------

**-மன்மதம் நீ**
**-நவயுகா குகராஜா**

நட்சத்திரப்படுக்கையில்
நீல வானம்!
நீர்த்திரை நடுவில்
நிலவின் ஆலிங்கனம்!
ஆளைத்துளைக்குமோர்
அதீத காற்று!
கட்டுக்கரைக் குளத்தில்
கால் நனைத்துக் கொண்டு
குறுகிய என்
கூடாரம் நுளைந்து
இமை மூடி
மெல்ல விளக்கணைத்த போது
வில்லங்கமாய் நீ
விளையாடிக் கொண்டிருந்தாய்..
ஒற்றை மின்மினி நீ!
என் இரவுகளில்
கிறுக்குவதும்
வாசிப்பதுமாய்!

--------------------------------

நீ கட்டிவிட்ட
சிலுவைகள்
இளகிப் போனதால்
அவை சிறகுகளாகும்
அவதானமிருக்கிறது!
**வனயட்சி**








சர்வதேச பெண்கள் தின வாழ்த்துகள் (பங்குனி 08)




# சத்தம் இல்லாத தனிமை வேண்டாம்

அப்ப எங்களுக்கெல்லாம் நேரம் பாக்க மணிக்கூடு தேவையில்லை. காது இருந்தாச் சரி அதிலேம் பாம்புக் காதெண்டா விசேசம். பாம்புக்கு காதில்லாமல் எப்பிடி அதிர்வுகள், உணர்வுகள் மூலம் கேக்குதோ அப்பிடித் தான் எங்கடை சனத்துக்கும் சத்தம் இல்லாமலே எல்லாம் கேக்கும்.

“சின்னவா ஆறு மணி ஆகீட்டு“எண்டு அம்மா கூப்பிட்டா அது அரை மைலுக்க எங்க இருந்தாலும் கேக்கும், இல்லாட்டியும் கேக்கிறமாதிரி இருக்கும். கேட்ட உடனயே அடுத்து வரி “சாமி கும்பிடோணும் விளையாடினது காணும்“ எண்டு சொல்லேக்க கிணத்தடீல நிப்பம்.

விடிய நாலரை, ஐஞ்சு எண்டு நேரம் மாறமல் அடிக்கிற கோயில் மணி அவைஅவையின்டை தேவைக்கு ஏத்த மாதிரி எழுப்பிவிடும். காலமைக் கோயில்களின்டை மணியடிக்கிற ஐயர் என்னெண்டு தான் ஆரும் எழுப்பாமல் மணிக்கூடும் இல்லாமல் விடிய எழும்பிறாரோ எண்டு யோசிக்க வைக்கும். ஊரில இருந்து கொஞ்சந் தள்ளி ஏதோ ஒரு கோயில் “விநாயகனைக் கூப்பிட்டு வெவ்வினையை வேரோட அறுக்கிற“ சீர்காழீன்டை பாட்டு அறைக்குள்ள இறுக்கி மூடிக்கொண்டு படுத்தாலும் இதமா எழுப்பிவிடும்.

இந்த இடைவெளீக்க பக்கத்து வீட்டை கரப்பைக்கால கலைச்சு விடகொக்கரிக்கிற அடைக்கோழீன்டை சத்தம், பாலுக்கு அவிட்டு விடாம தானே முழுப் பாலையும் கறக்கிற வேலுச்சாமியோட சண்டைக்குப் போற கண்டுக்குட்டி கத்திற சத்தம், வேப்பம் பழம் சாப்பிட்டு தொண்டை கட்டிக் கீச்சிடிற கிளீன்டை சத்தம், தண்ணி தெளிக்காம முத்தத்தைக் கூட்டேக்க புழுதி மணத்தோட வாற சத்தம், எண்ணை விடாத கப்பீல மாசிலாமணியார் தண்ணி இழுத்துக் குளிக்கிற சத்தம் எல்லாம் எழெழணை பண்ணின alarm மாதிரித் தொடந்து எழுப்பிக் கொண்டே இருக்கும். இதையெல்லாம் கேக்காமல் படுத்தாலும் அம்மாவின்டை குரல் எப்பிடியும் எழுப்பி விட்டிடும்.

விடிஞ்சு கொஞ்சம் வெளிக்கத் தொடங்கப் பக்கத்து ஒழுங்கேக்க “டிங் டிங்“எண்டு சைக்கிள் மணி அடிக்கிற பால்க்காரனுக்கு இங்க செம்பு கழுவி ரெடியாகி, அந்த இடைவெளீக்க குப்பைக் காரனின்டை டிரக்டர் சத்தத்துக்கு குப்பை வாழியை ஒழுங்கை முடக்கில வைச்சிட்டு, அவன் குப்பையை மட்டும் தான் எடுத்துக் கொண்டு போறான் எண்டதைக் உழகெசைஅ பண்ணீட்டு இருக்க ஐஞ்சு மணிக்கு வந்திருக்க வேண்டிய வாற மெயில் ரெயின் பிந்தி அரசடி ரோட்டை தாண்டிப் போறது கேக்கும்.

கொஞ்சம் கொஞ்சமாப் பள்ளிக்கூடக் கெடுபிடிச் சத்தமெல்லாம் எட்டு மணிக்கு அடங்க ஒவ்வொரு மீன்காரனா horn அடிக்க எங்கடை மீன்காரன் அடிக்கிறது பிறிம்பாக் கேக்கும்.

எத்தினை சைக்கிள் போனாலும் தபால்க்காரன்டை சைக்கிள் மணி தனியாத் தெரியும், அதுகும் அம்மம்மாவுக்கு பென்சன் வாற நாளில இன்னும் பிலத்தாக் கேக்கும். அப்பப்ப புளியும், ராசவள்ளிக்கிழங்கும், சின்ன வெங்காயமும் கொண்டந்து ரோட்டில கூவி விக்கிற சித்திரம், வருசத்துக்கு ரெண்டு தரம் மூண்டு தரம் எண்டு சுத்தித் திரியிற கூட்டத்தில கத்தி சாணை, அம்மி பொழியிறவன், பழைய போத்தில், பேப்பர் வாங்கிறவன், எப்பாவது சீவப் போகாமல் தேங்காய் புடுங்க, ஓலை வெட்டிறதுக்கு வாறவன் எண்டு கத்திக் கொண்டு எவன் ஒழுங்கையால போனாலும் வீட்டுக்குள்ள எங்க இருந்தாலும் சத்தம் கேட்டுக் கொண்டே இருக்கும்.



Dr.T. கோபிசங்கர்
(யாழ்ப்பாணம் அரச வைத்தியசாலை)
இலங்கை

மத்தியானம் வேலை முடிஞ்சு அம்மா அயர்ந்திருக்க முன்வீட்டில பக்கத்துப் பள்ளிக்கூடம் முடிஞ்சு வாறவை படலை துறக்க வாற சத்தம் கேட்டு அம்மா எழும்பி வாற எங்களுக்கு முட்டை பொரிப்பா ஒரு நேரக்கணிப்போட. எல்லாம் முடிச்சுச் சாப்பிட்டிட்டு திருப்பிப் படுக்க காத்துக்கு கூரையில மாங்கொப்பு முட்டிற சத்தம் கேட்டா அடுத்த நாள் குருவிச்சையும் கொப்பும் வெட்ட ஆளைக் கூப்பிட்டிட்டுவா. கொஞ்சம் அயரேக்க வெத்திலைக்கு சுண்ணாம்பு, இண்டையான் பேப்பர், இந்தக் கதைப்புத்தகம் இருக்கா, விளையாட வாறியா எண்டு கேட்டு அரட்டைக்கு வந்து படலைக்க நிண்டு கூப்பிடறவின்டை சத்தம், மற்றாக்களின்டை நித்திரையைக் குழப்பாமல் தேவையான ஆளை மட்டும் எழுப்பும்.

அக்கம் பக்கம் நடக்கிற சண்டை அப்பப்ப காத்தோட கேக்கும். ஒரு வீட்டுச் சண்டை மற்ற வீட்டை தெளிவாக் கேக்காட்டியும் சண்டை பிடிச்ச ஆக்கள், நடந்த நேரம், அப்பப்ப காத்தில வந்து போன அவளின்டை, அவன்டை பேருகளை வைச்சும், போனமுறை வந்த சண்டையை வைச்சும் என்ன பிரச்சினையாம் எண்டு வெத்திலை வாங்க வந்த பயில அலசிப் பிடிச்சிடுவினம்.

கலாஜோதி கலையரங்கத்தில நடக்கிற பட்டிமன்றத்தையும்,அரசியல் நிகழ்வுகளையும் வீட்டை இருந்தே கேட்டு தீர்ப்புச் சொல்லிறாக்களும் இருந்தவை. அதே போல கோயில்த் திருவிழாக் காலத்தில எல்லாரும் ஒண்டா அந்தரப்பட்டுப் போகத் தேவேல்லை.ஆய்த்த மணி கேட்டு அம்மம்மா போக, அபிசேக மணிக்கு அம்மாவும் தம்பியும் போக, கொடி மரப் பூசை மணிக்கு நாங்கள் வெளிக்கிட்டு சரி இனி வசந்தமண்டபப் பூசை சாமி தூக்கச் சரியா இருக்கும் எண்டு கணிச்சுப் போறனாங்கள்.

இரவில தூரத்தில வாற ஐஷ்கிறீம் வானின்டை பாட்டும், மணத்தோட வாற கரம் சுண்டல் வண்டிலின்டை மணியும் main road ஆல போகும். சத்தத்தை வைச்சு தூர நேரம் பாத்து சரியா ஒழுங்கை முடக்குக்குப் போவம் நாங்கள்.

இரவு படுத்தாப் பிறகு முகட்டில தலை கீழா நிண்ட படி திண்ட பூச்சி சமிக்காம பல்லி உச்சுக்கொட்ட, கதவில மூண்டு தரம் தட்டீட்டு அப்ப தான் நெச்சதுக்கு தடையில்லை, நாளைக்கு போட்டு வரலாம் எண்டிற மாமா, உழுந்து மணம் மணக்குது பாம்புக் கொட்டாவியா இருக்கும் பாத்துப் பின்பக்கம் போ கண்டு பிடிச்சு சொல்லிற ஆச்சி, படுத்தாப் பிறகு நித்திரையில இரவில குசினீக்க வந்தது ஆர் வீட்டுப் பூனை, நேற்றை முழுக்க குலைச்சது எந்த வீட்டு நாய், ரோட்டில குலைக்கிற நாய் பழக்கமான ஆளுக்கு குலைக்குதா இல்லாட்டி ஆமிக்கோ குலைக்குதா, கிறீச் கிறீச் எண்டு இரவு late ஆ ஓடிற சைக்கிள் ஆர்டை, சாமத்தில வேலிக்கு வேலி தட்டித் தடவிப் பாட்டோட போனது அமரசிங்கமா, தளையசிங்கமா எண்டு துப்பறிஞ்சு சொல்லிற அம்மம்மா எண்டு எல்லாருக்கும் ஐம்புலனிலும் செவிப்புலன் அதிகமா வேலை செய்யும்.

எண்பதுகளின் நடுப்பகுதி, இரவில திரியிறது கள்ளனா குள்ளனா எண்டு சனம் பயந்திருந்த காலம் அப்ப. “ஐயோ கள்ளன்“ எண்டு தூர எங்கயாவது கேட்டா தகரம் தட்டி, தடி எடுத்து, கோயில் மணி அடிச்சு, ஊரே கள்ளனைத் தேடி, ஓடிறான் எண்டு பின்னால ஓடிப் பிடிக்கப் போய் களைச்சு வாறவைக்குப் பிளேன்ரீ குடுத்து போன கள்ளன் திருப்பி வாறானா எண்டு விடியவிடியப் படுக்காமலே பாத்திட்டு அப்பிடியே பள்ளிக்கூடம் போறனாங்கள்.

28 ஆம் பக்கம் பார்க்க...

# அகில இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் ஆரம்பம்

**ஒன்றியத்தின் தலைவராக தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் தெரிவு.**

இலங்கையில் அச்சு, இலத்திரனியல்,இணையத்தளம், பதிவு செய்யப்பட்ட சமூக ஊடகங்களில் பணிபுரியும் தமிழ் மொழிபேசும் ஊடகவியலாளர்கள் மற்றும் பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு தனித்துவத்துடன் செயற்படக்கூடிய அமைப்பை உருவாக்குவதற்கான முதல் முயற்சியாக



விசேட கூட்டமொன்று இன்று (16. 02.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்று அகில இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் ஆரம்பித்துவைக்கப்பட்டது. இதன்போது, தமிழ் ஊடகவியலாளர்களுக்கான புதிய ஒன்றியத்தின் நிர்வாக தெரிவுகள் இடம்பெற்றன.

ஒன்றியத்தின் தலைவராக தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் தெரிவு செய்யப்பட்டார். ஒன்றியத்தின் செயலாளராக தமிழன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர்.சிவராஜாவும் பொருளாளராக திருமதி வருணி



**மறைந்த சிரேஷ்ட ஊடகர் இராஜநாயகம் பாரதிக்கும் அஞ்சலி .....**

( ஜுனியர் தமிழன் பத்திரிகை) தெரிவு செய்யப்பட்டனர். அனைவருக்கும் வெற்றிமணியின் வாழ்த்துக்கள்.

அண்மையில் மறைந்த சிரேஷ்ட ஊடகர் இராஜநாயகம் பாரதிக்கும் மரணித்த ஊடகவியலாளர்களுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

# இலங்கையில் இளைஞர்கள் போதைப்பொருள் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கான முயற்சியில் JMFOA தோண்டு நிறுவனம்





தொண்டு நிறுவனமான யாழ்ப்பாண மருத்துவ பீட வெளிநாட்டு முன்னாள் மாணவர் சங்கம் (JMFOA ) சார்பாக டாக்டர் வாசுகி தவராஜசிங்கம், அவரது கணவர் திரு தவராஜசிங்கம், அவரது குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் ஆகியோரால் ஜனவரி 26, 2025 அன்று Dortmund ல் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த இரண்டாவது நிதி திரட்டும் நிகழ்வு மிகப்பெரிய வெற்றியைப் பெற்றிருக்கிறது. ஜெர்மனியில் வசிக்கும் தமிழ் புலம்பெயர்ந்தோர் மற்றும் இங்கிலாந்தைச் சேர்ந்த JMFOA உறுப்பினர்களை ஒன்றிணைத்து நடத்திய இந்த நிதிசேகரிப்பு இலங்கையில் இளைஞர்கள் போதைப்பொருள் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளை எடுப்பதற்கும் மற்றும் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் சமூக மட்டத்தில் புற்றுநோய்களால் பாதிக்கப்படுபவர்களை முன்கூட்டியே கண்டறிவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்வதற்குமானதாகும்.





இந்த நிகழ்வில் ஏராளமானோர் கலந்து கொண்டனர். வரவேற்பு உரையை JMFOA UK தலைவர் திரு ராஜரத்தினம் நிகழ்த்தினார். சிறப்புவிருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவப் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் சுரேந்திரகுமார் அவர்கள் கலந்து சிறப்புரை வழங்கிச் சிறப்பித்தார்.

இந்த நிகழ்வில் ஜெர்மனியில் உள்ள தமிழ் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் இங்கிலாந்தைச் சேர்ந்த யாழ் மருத்துவ பீட முன்னாள் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

மதியம் மற்றும் மாலையில் நடந்த இந்த நிகழ்வில், JMFOA இன்டர்நேஷனல் ஒருங்கிணைப்பாளரும், இந்த இரு திட்டங்களினது ஒருங்கிணைப்பாளருமான டாக்டர் நவநீதன், தற்போது நடைபெற்று வரும் திட்டங்கள் மற்றும் எதிர்காலத்திற்கான மேலும் விரிவாக்கம் பற்றிய விவரங்களை விளக்கி உரையாற்றினார்.


ஜெர்மனிய தமிழ் சமூகத்தைச் சேர்ந்த பல்வேறு தன்னார்வ மாணவர்களின் நடன நிகழ்ச்சிகள், இசைக்குழு மற்றும் பாடல் போன்ற பல நேரடி பொழுதுபோக்கு நிகழ்வுகளால் இந்த நிகழ்வு மிகவும் வெற்றிகரமாக அமைந்தது.

கஸ்தூரி சலங்கை ஒலி நாட்டியக் கலா மன்ற ஆசிரியரும், கலை பண்பாட்டுக் கழக மூத்த ஆசிரியருமான சாவித்திரி சரவணன் MA. & M Phil in dance. அவர்களின் மாணவிகள் வழங்கிய 'கோகில கிருஷ்ணா' நடனம் மிகவும் சிறப்பாக இடம் பெற்றது. பலரது மனங்களையும் கொள்ளை கொண்டது.

தாரணா நர்த்தனாலயம் ஆசிரியர் திருமதி தனுஷா ரமணன் அவர்களின் மாணவிகள் வழங்கிய 'தசவதாரம்' பலரது பாராட்டையும் பெற்றது.

இந்த நிதி திரட்டலின் தாக்கம் வரும் ஆண்டுகளில், இலங்கையில் உள்ள சமூகத்தினால் உணரப்படும். இப்படியான நிகழ்ச்சிகள் ஜெர்மனியில் உள்ள தமிழ் சமூகத்தில் அடுத்த தலைமுறையை சமூக சிந்தனை உடையவர்களாக வளர்க்கும் என்பதில் சந்தேகமில்லை.

தாராளமான பங்களிப்புகள் மற்றும் பங்கேற்பிற்காக, JFMOA தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டது.






சர்வதேச பெண்கள் தின வாழ்த்துகள் (பங்குனி 08)

# பெண்களின் விளையாட்டுத்துறை வளர்ச்சிக்கு விடுதலையை பெற்றுக்கொடுத்தது உடுவில் மகளிர் கல்லூரி





பழனித்துரை தர்மகுமாரன் (தலைவர் உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கம்)

வடக்கு மாகாணத்தை பொறுத்த வரையில் விளையாட்டில் பெண்களின் பங்களிப்பு அதிகமாகவே உள்ளது என்று கூறுவதில் மிகையேதுமில்லை ஏனெனில் ஆண்கள் பங்குபற்றுகின்ற அனைத்து போட்டிகளிலும் சரிநிகராக வெற்றிபெற்று கோலோச்சி வருகின்றனர் ஆனால் முன்னோரு காலத்தில் பெண்கள் மென்மையானவர்கள் பூப் போன்றவர்கள் என்ற சிந்தனையின் அடிப்படையில் வலைப்பந்தாட்ட விளையாட்டு மட்டுமே அறிமுகப்படுத்தப் பட்டது அதிலும் மைதானம் பகுதிகளாக பிரிக்கப்பட்டு அந்தப் பகுதிகளுக்குள்ளேயே விளையாடவேண்டும் என்னும் விதி.இது அமெரிக்கதேசத்தின் பேராசிரியர் ஜேம்ஸ் நைஸ் சிமித் என்பவரால் முதல் முதலில் பெண்களுக்கு அறிமுகம் செய்த விளையாட்டாகும். இங்கு பெண்கள் களைத்து



விடுவார்கள் என்னும் சிந்தனையில் உருவாக்கப்பட்டு விளையாடப்பட்டது.

ஆனால் எமது தேசத்தில் பெண்கள் பேதைகளாகவும் அடிமைகளாகவும் வீட்டுக்குள் முடக்கப்பட்டவர்களாகவும் காணப்பட்டனர். அதற்கு காரணம் வடக்குமாகாணத்தில் விதைக்கப்பட்ட மூடநம்பிக்கையும் கலாச்சாரமும் அதாவது பெண்கள் மாதவிடாய் காலத்தில் வெளியே செல்லக்கூடாது விளையாடக்கூடாது தொட்டால் துடக்கு தீட்டு என்ற கருத்தியல் அத்துடன் விளையாட்டு ஆடைகள் கலாச்சாரத்திற்கு ஒவ்வாதது என்ற கருத்தியல் வலுவாக இருந்ததால் விளையாட்டுக்கு பெண்களை அனுமதிப்பதில்லை. அந்தநேரத்தில் புரட்சிகரமான விடுதலையை பெண்களுக்கு பெற்றுக்கொடுத்தது உடுவில் மகளிர் கல்லூரி. இங்கு பெண்களுக்கான கல்வியை மட்டுமல்லாது இணைபாடவிதான செயல்பாடுகளையும் ஊக்குவித்தது அதிலும் விளையாட்டுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து பெண்களின் தலைமத்துவத்தையும் ஆளுமையையும் வெளிக்கொணர அடித்தளமிட்டது. இதன்மூலம் பெண்கள் மத்தியில் தன்னம்பிக்கை தற்துணிவு ஆர்வம் முயற்சி என்பன கட்டியெழுப்பப் பட்டபின்னரே வடக்கு பாடசாலைகளில் பெண்கள் மத்தியில் விளையாட்டு அருவியாக பாயத்தொடங்கிய போதும் இன்றும் சில பாடசாலைகளில் விளையாட்டுக்குரிய ஆடைகளுக்கு முழுமையாக அங்கீகாரம் வழங்கவில்லை.

அது மாணவர்களின் திறன்விருத்திக்கு தடையாகவுள்ளது. இருந்தபோதும் சர்வதேச போட்டிகளில் பெண்கள் பயன்படுத்தும் ஆடைகளை முதலில் அறிமு கம் செய்யும் பெண் பாடசாலை உடுவில் மகளிர் கல்லூரி அதன் பின்னே ஏனைய பாடசாலைகள் பின்தொடரும் அந்த வகையில் ஹொக்கி கூடைப்பந்தாட்டம் வலைப்பந்தாட்டம் மேசைப்பந்தாட்டம் பூப்பந்தாட்டம் போன்ற விளையாட்டில் சாதித்து வந்ததுடன் இலங்கை கூடைப் பந்தாட்ட அணியில் உடுவில் மகளிர் கல்லூரியின் பழைய மாணவி பிலோனி கமலினி மில்ஸ் விளையாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இது உடுவில் மகளிர் கல்லூரியின் வரலாற்றில் பெருமைக்குரிய விடயமாகும். பெண்கள் இன்றைய காலகட்டத்தில் கல்வியிலும் சரி தொழிலும்சரி ஆண்களைவிட அதிகமாகவே உள்ளனர் இருந்தபோதும் பெண்கள் ஆளுமையுடன் செயல்படுவதற்கு காரணம் விளையாட்டே அந்த விளையாட்டை ஊக்குவித்ததில் உடுவில் மகளிர் கல்லூரிக்கு முக்கிய பங்குண்டு. ஏனெனில் மூடநம்பிக்கையையும் பெண்களின் அச்சத்தையும் களைந்ததுடன் அவர்களுக்குள் உள்ள ஆற்றல் திறன் என்பவற்றை உணரசெய்து வெளிக் கொணர செய்தார்கள் இல்லையேல் இன்றும் பெண்கள் அடிமைப்பட்டே இருந்திருப்பார்கள். மாறாக பெண்கள் தலை நிமிர்த்தி தனித்துவமாக தனக்கென உரிமையுடன் சமத்துவத்துடன் சமூக வழிகாட்டிகாலாக திகழ்ந்து வருகின்றனர்.




வடக்கு மாகாணத்தில் பெண்கள் சாதிக்கும் பாடசாலைகளில் மகாஜனா கல்லூரி தொடர்ந்து உதைபந்தாட்டத்தில் தேசியமட்ட சாதனையை நிகழ்த்தி வருகின்றது.14 வயதின் கீழ் பாடசாலை சமபோஷா கால்பந்தாட்டம்.தெல்லிப்பழை மகாஜனா 4 வது தடவையாகவும் சம்பியன் ஆகியுள்ளது.(மாசி.2025) யாழ்ப்பாணம்




திருக்குடும்பகன்னியர் மடபாடசாலை கூடைப்பந்தாட்டத்தில் தேசியரீதியில் சாதனை நிகழ்த்தியுள்ளது கிளிநொச்சி கோணாவில் மகா வித்தியாலயம் கபடியில் தேசிய சாதனையை நிகழ்த்தியது அத்துடன் பளுதூக்கும் போட்டியில் பெண்கள் பாடசாலைகளின் தேசியரீதியான ஆதிக்கம் அதிகரித்துள்ளது. இதில் அதிக பதக்கங்களை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது அதேபோல குத்துச்சண்டை கராத்தே போட்டிகளிலும் தமது முனைப்பை அதிகரித்துள்ளதுடன் மெய்வல்லுனர் போட்டிகளிலும் அருணோதயா மகாஜனாக்கல்லூரி பெண்கள் கோலூன்றி பாய்தலில் சாதித்து வருகின்றனர்.

## தன் பிரிவை உணர்ந்த பாரதி



தன் பிரிவை உணர்ந்த பாரதி
இருதினங்களுக்கு முன்னரே 18.01.2025
தன் அரசியல் கட்டுரையை
வெற்றிமணிக்கு அனுப்பி வைத்தார்.

**இனி ஆர்.பாரதி
எனக்கு உன்போல்!
உன் அன்புக்கு உரிய
சிவகுமாரன்.**




சர்வதேச பெண்கள் தின வாழ்த்துகள் (பங்குனி 08)



# எத்தைத் தின்றால் பித்தம் தெளியும்

தாய்: மகனே நான் சித்தா பார்க்கப் போகிறேன்.

மகன்: என்னம்மா, உங்களுக்கு எங்கே சித்தப்பா இருக்கிறார்?

தாய்: அட போய்யா, நான் சித்தா வைத்தியம் பார்க்கப் போகிறேன்.

உடம்பு நோ, நாரி நோ, முழங்கால் நோ, பாத எரிவு, எலும்பு தேய்மானம் – கடவுளே எத்தனை வருத்தமப்பா? இது மட்டுமா...? இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், கொழுப்பு, மன உளைச்சல், மன அழுத்தம் எத்தனை எத்தனை. இதற்கெல்லாம் ஆங்கில வைத்தியரிடம் தான் பறந்து போவோம். அங்கு என்ன நடக்கும்? பாக்டீரியா, வைரஸ் என்று சொல்லி விதம் விதமான சிலினுகளையும் மாத்திரைகளையும் தருவார்கள்.

பக்கவிளைவுகள் ஏற்படலாம் என்றும் கூறுவார்கள். என்ன செய்வது ஆங்கில மருத்துவ உலகில் வாழ்கின்றோம்.

சுகர்,பிரஸர், கொழுப்பு நோய்களுக்கு மாத்திரைகள் தரப்படும். இது நோய்களே இல்லை. இந்த “நோய்களுக்கு“ எங்கள் சமையலறையிலேயே வைத்தியம் இருக்கு. இதை யார் கவனிப்பார்?

அவர்கள் தந்த மாத்திரைகளால் யாருக்காவது அந்த நோய்கள் இல்லாமல் போயிருக்குமா? கிடையாது! வாழ்கை பூரா மாத்திரை போடவே வேண்டும். ஆனால் பாதிப்பு இருந்து கொண்டே இருக்கும். எங்க வாயும் சும்மாவா? பக்கத்தில் பேரன் சாப்பிடும் பிரியாணியில் ஒரு கண், மகன் வாங்கிவரும் பிட்ஸாவில் நாலு வாய். இது போதாதா? ஆங்கில வைத்தியமும் பல உயிர்களைக் காப்பாற்றியே வைத்திருக்கிறது. இதயநோய் புற்றுநோய் இப்படியான பல நோய்கள் அடங்கும். அதிலும் குறை சொல்ல முடியாது.

நான் என் கதைக்கு வருகிறேன். என் உடம்பு எலும்புகள் பலவகையான தேய்மானத்துக்கு உட்பட்டு நித்தம் வேதனை தான். தடுக்கி விழுந்தால் அங்குதானே போகவேண்டும். பல தடவை போனேன், கையில் பலதடவை அறுவைசிகிச்சையும் செய்தார்கள். ஊசிகள், மருந்துகள் என்று போக்கிடமின்றி ஆமா போட்டேன்.

இறுதியில் நான் ஊகூமே போட்டுவிட்டேன். காரணம் என் கை தோள்மூட்டிலிருந்து கீழ்நோக்கி சரியான வலி. தோள் மூட்டில் கூடுதலான தேய்மானம். இனி அறுவை சிகிச்சை அல்லது விலை கூடிய ஊசி எலும்பில் ஏற்றவேண்டும். ஊசி ஏற்றினாலும் மீண்டும் ஒரு வருடத்தால் வலி உண்டாகும், மீண்டும் ஊசி. போதுமடா சாமி வைத்தியத்துக்கே ஒரு கும்புடு!

என் நிலைமை எப்படி இருந்தது தெரியுமா? கை மேலே தூக்கமுடியாது, பின்னால் கொண்டுபோகமுடியாது, தலை முடி சரியாக வாரமுடியாது, சிலசமயம் சோறு எடுத்து வாயில் வைக்கமுடியாது. முழங்கையை இடதுகையால் பிடித்து உயர்த்தியே வாயில் கையை கொண்டு போவேன். பரிதாபமான காட்சியப்பா இதெல்லாம்.

இன்னுமொரு முக்கிய நோய் ஒன்றும் எனக்கு இருக்கு. அதே எலும்பு தேய்மானத்தால் மலவாசல் இரண்டு பக்கமும் உள்ள எலும்புகள் மற்றும் மலவாசல் உட்புறமும் எனக்கு ஒரு வலி உண்டாகும். அதைப்போல் ஒரு வலி குழந்தைப் பேறு வலிக்கு ஒப்பானது. இந்த நோய் இருபத்தைந்து வருடமாக இருக்கிறது. குறைந்தது பதினைந்து வைத்தியர்கள் பார்த்திருப்பார்கள்.

பலவித கமராக்கள் பரீட்சைகளும் பண்ணிப் பார்த்துவிட்டார்கள். வழியே பிறக்கவில்லை. நான் முடிவு எடுத்தேன் ஆங்கில வைத்தியம் வேண்டாம் சித்தா ஆயுர்வேத வைத்தியம் பார்ப்போம். கேரளா முழுவதும் தேடினோம், பல வழிகளில் அழைத்தார்கள். வெளிநாடுதானே



பாக்குப் பாட்டி (யேர்மனி)

பணம் முன் நின்றது, இருந்தும் நோய் தீரவேண்டுமே?

நான் வணங்கும் தெய்வங்களின் அருளோ தெரியவில்லை ஒரு பொறி மண்டையில் தட்டியது. ஏன் என் நாட்டில் போய் வைத்தியம் பார்க்கக் கூடாது? அங்கே போவோம் எனத் தீர்மானித்து சித்தா பார்க்கப் போவதாகப் பிள்ளைகளிடம் கேட்டேன்.

அங்கு போய் நாற்பது நாட்கள் நின்று வைத்தியம் செய்தேன். வைத்தியசாலைக்கு நான் சென்றது கிழமைக்கு ஒருதரமாக நான்கு தடவைகள் மட்டுமே. அங்கு நிற்கும் நாட்களில் ஒரு பெண்ணின் உதவியுடன் மசாஜ், ஒத்தடங்கள் எண்ணை தேய்ப்பது போன்றவை திறம்படச் செய்து நாடு திரும்பி உள்ளேன். ஒரு வருடத்துக்கு மேலாகிவிட்டது. இப்போது எனது கை இரண்டு பேரைத் தூக்கும் பலம் பெற்றுள்ளது. மற்றும் எனது இருபத்தைந்து வருட வேதனை 80% இல்லாமலே போய்விட்டது.

நான் மாறிவிட்டது என மட்டுமே சொன்னேன், எப்படி என்பதை விவரிக்கின்றேன்.

கொழும்பில் உள்ள பெரிய சித்தா வைத்தியசாலைக்குச் சென்றேன். நாட்டில் அரசாங்கம் தான் தமிழருக்கு எதிரி ஆனால் சிங்கள மக்கள் இல்லை. அவர்கள் அன்பாகவும் ஆதரவாகவும் நடந்தார்கள். எனது நல்ல காலம், தமிழ் பேசும் வைத்தியர் என் கையை திருப்பினார், மடக்கினார், அழுத்தினார்.

உயிர் போகும் அளவுக்குத் தோள்மூட்டு எலும்பின் மொழியை அழுத்தினார். எண்ணை, ஒத்தடம், பத்து சகலதும் அவர்களே தந்தார்கள். ஒருமாதத்தில் நான்கு தடவையும் அப்படியே நடந்தது.

சித்தா ஆயுர்வேத வைத்தியத்தில் பத்தியம், கசப்பான கசாயங்கள், மூலிகை மருந்துகள் என்றெல்லாம் சொல்லி அந்த வைத்தியம் பக்கம் போகாதவர்கள் எத்தனையோ பேர். அதெல்லாம் அந்தக் காலம்!

இப்போது மாத்திரைகள் மட்டுமே. அழகான வைத்தியம், அற்புதமான அணுகுமுறை. முக்கியமான ஒன்று, உடல் பயிற்சிகள் செய்யவேண்டும். அது செய்யாவிட்டால் எந்த வலிகளும் போகவே போகாது.

எங்கள் நாட்டில் எவ்வளவு திறமைகள் உள்ளன. மேலை நாடுகளில் இல்லாத அற்புதங்கள் உண்டு. அங்கு உள்ள மருத்துவ எண்ணெய்களைத் தடவினால் ஓடிவிடும் கால் கை வலிகள். நம்பிக்கை வேண்டும் நோய்கள் தீர. நான் உங்களுக்குச் சொல்கிறேன், ஆனால் என் பிள்ளைகள் ஊகூம் அதா இதா என்று கிட்டவே வரமாட்டார்கள். எல்லாம் பட்டுத் தான் திருந்தவேண்டும்.

நான் மீண்டும் சித்தாவிடம் போகிறேன்! யார் யார் வரப்போகிறீர்கள்?







சர்வதேச பெண்கள் தின வாழ்த்துகள் (பங்குனி 08)

# தலைவாழை இலை போட்டு விருந்துவைப்பேன்





பெயர்கள் மட்டுமே முகவரியாகும் வண்ணம் தம்மைத்தாமே செதுக்கிக்கொண்டவர்கள் வரிசையில் கீதா இரவியும் இடம்பெறுகின்றார்.

இலங்கையில் குரும்பசிட்டி கிராமத்தை சேர்ந்த கீதா, தற்போது நோர்வே நாட்டில் வசித்துவருகிறார்.

ஒவ்வொரு மனிதரிடமும் ஒவ்வொரு ஆற்றல் புதைந்து கிடக்கும். தன்னுள் இருக்கும் ஆற்றலைக் கண்டு கொண்டவர்கள், தளிர்க்கத் தொடங்குவர். அவர்கள் தமக்கான துறையில் துணிவுடன் கால்பதிக்கும் போது உலகம் அவர்களை அடையாளம் காணும். நோர்வே நாட்டில் அடையாளம் காணப்படுகிறார் கீதா இரவி.

## நோர்வே தேசியப் போட்டியில் 2024 ஆம் ஆண்டுக்கான வெண்கலப் பரிசு.

கீதா இரவி (இராசாலிங்கம்) 'Akersvannet' நீரேரியின் மருங்கில் ஒரு ரம்மியமான தருணத்தைத் தன் ஒளிப்படக்கருவிக்குள் சட்டகப் படுத்தியுள்ளார். அதன் விளைவு 'Love' என்ற தலைப்பைப் பெற்ற ஒளிப்படமாக உருவானது. அத்துடன் அந்த ஒளிப்படம் நோர்வே தேசியப் போட்டியில் 2023 ஆம் ஆண்டுக்கான வெண்கலப் பரிசினையும் பெற்றுள்ளது. சக்கர நாற்காலியைப் பயன்படுத்தும் கீதா ஒளிப்படக் கலை சார்ந்து தனக்கெனத் தனித்துவமானதோர் அணுகுமுறையை உருவாக்கியுள்ளார். ஒளிப்படத்திற்கான உகந்த தூண்டுதலைப் பெறும்நோக்கில் அவர் வாகனத்தில் பயணிக்கின்றார்.

Akersvannet' நீரேரிக்கான தனது ஒரு பயணத்தில், கலவியில் இணையவிருந்த ஒரு சோடி நீலத்தட்டான் பூச்சிகளை காண்கின்றார். அவற்றின் நிறங்களை மெருகூட்டி, பொன்நிறப் பின்னணியுடன் அழகான படத்தை உருவாக்க விரும்பினார். 'அன்றைய காற்றின் தன்மையால்










புற்கதிர்கள் அவ்வப்போது வளைந்து கொண்டிருந்தன. அந்தச் சூழல் சட்டகமிடலைப் பரிசோதிக்க எனக்கு வாய்ப்பை வழங்கியது' என்றார் கீதா. சுற்றிலும் தேடிய பிறகு, பொன்நிறப் பின்னணியைக் கொடுக்கக்கூடிய ஒரு 'Buttercup/ Smørblomst' மலர்ச்செடியைக் கண்டார். தட்டான் பூச்சிகள் 'Buttercup' மலரை நோக்கி வளையும் தருணம்வரை கீதா பொறுமையாகக் காத்திருந்தார்.



கீதா இரவி
(நோர்வே)

'தட்டான் பூச்சிகள் வளைந்த புற்கதிரின் மீது இறங்கும் தருணம் வந்ததும், நான் கற்பனை செய்ததற்கு அமைய அக் காட்சியைப் படம்பிடித்தேன் ' என்று அவர் கூறுகிறார்.

கீதா இதற்கு ஒரு ஒலிம்பஸ்கமராவையும், 300mm Zuiko லென்ஸையும், 1.4 × டெலிகான்வெர்டரையும் பயன்படுத்தினார் (Olympus camera with a Zuiko 300mm lens and a 1.4× teleconverter). இது தூரத்தில் இருந்து 'பெருப்பிக்கப்பட்ட (Macro)' படங்களை எடுக்க அவருக்கு உதவியது – சக்கர நாற்காலியில் இருப்பவருக்கு இது பயனுள்ளது. 'Love' ஒளிப்படம் கீதாவின் அர்ப்பணிப்பு மற்றும் படைப்பாற்றலுக்குச் சான்று பகர்கின்றது. இதன் மூலம் அவர் உடற் சவால்களைக் கடந்து இயற்கையின் வனப்பினை ஒளிப்படங்களாக உருவாக்க உந்துதலளிக்கின்றது.

இவர் அண்மையில் தாயகம் சென்றபோது மண்ணுக்கு அழகும் உயிரும் கொடுக்கும்,காட்சிகளைப் படம் பிடித்தார். பலருக்கும் பிடித்த சில படங்கள் இங்கு இடம் பெறுகின்றது.

## தலைவாழை இலை போட்டு விருந்துவைப்பேன்

அடுத்து ஆகா தலைவாழை இலை போட்டு விருந்துவைப்பேன் என் தலைவி வருகைக்காய் காத்திருந்தேன் என வாழை இலைமீது இருந்து தலைவியைத்தேடும் ஆண் கிளி. பங்குனி 08 பெண்கள் தினத்திற்கான கௌரவம் கொடுக்கிறது.

## ஒளித்து விளையாடல்

கோவிலில் ஒளித்துப் பிடித்து விளையாடிக்

29 ஆம் பக்கம் பார்க்க...



20 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## பெண்விடுதலை பற்றிய....

நிலத்தின் தன்மை
பயிர்க்குள தாகுமாம்
நீசத் தொண்டு மடமையும் கொண்டதாய்
தலத்தில் மாண்புயர் மக்களைப் பெற்றிடல்
சாலவே யரி தாவதொர் செய்தியாம்
குலத்து மாதர்குக் கற்பியல் பாகுமாம்
கொடுமை செய்தும்

அறிவை யழித்துமந்
நலத்தைக் காக்க
விரும்புதல் தீமையாம்
நங்கை கூறும் வியப்புகள் கேட்டீரோ!
மாதர்க் குண்டு சுதந்திரம் என்றுநின்
வண்ம லர்த்திரு வாயின்
மொழிந்தசொல்

நாதந் தானது நாரதர் வீணையோ?
நம்பிரான் கண்ணன்
வேய்ங்குழ லின்பமோ? வேதம் பொன்னுருக்
கன்னிகை யாகியே
மேன்மை செய்தெமைக் காத்திடச் சொல்வதோ?
சாதல் மூத்தல் கெடுக்கும்

அமிழ்தமோ? தையல் வாழ்கபல் லாண்டுபல்
லாண்டிங்கே!

என்று போற்றுதலும் வாழ்த்துதலுமாய் பாரதி போற்றிய பெண்மை போற்றி வையகம் இன்புற இன்னுமின்னும் நேசமாய் சிநேகமாய் ஆதர்சமாய் ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வோம். ■

18 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## நெல் களஞ்சியசாலைகளையும்

சில நேரங்களில் அந்த நாடுகள் நம் நாட்டின் ஒரு பகுதியை எடுத்து தங்களுக்கென குக்கிராமங்களை அமைப்பதற்காக நமக்குக் கடன் வழங்குகின்றன.

எனவே, விவசாயிகளுக்கு நல்லுக்கான உத்தரவாத விலைகள் பிரச்சினையில் அரசாங்கத்தையே விமர்சிக்க முடியாது.

ஆனால் ஒரு நாடாக எடுத்துக்கொண்டால் அரசாங்கம் விவசாயிகளுக்காக அதிகபட்ச அர்ப்பணிப்பைச் செய்ய முடியும். அரிசி உற்பத்தி என்பது ஒரு கடினமான பணியாகும். ஐந்து ஆண்டுகளுக்கு முன்னரான மதிப்பீடுகளின்படி, ஒரு கிலோ நெல் உற்பத்தி செய்ய அரசாங்கத்திற்கு 220 ரூபாய் செலவாகியது. உர மானியங்கள், பூச்சிக் கொல்லிகள் மற்றும் களைக்கொல்லிகளுக்கு செலவிடப்பட்ட தொகை, விவசாயிகளின் உழைப்புக்காக ஒதுக்கப்படும் தொகை, நெல் வயலுக்கான நில வாடகை, நெல் வயல்களுக்கு நீர் வழங்குவதற்கான செலவை கருத்தில் கொண்டு, ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் அரசாங்கம் ஒரு கிலோ நெல்லுக்கு ரூ.220 செலவிட்டது. இன்று, இந்த எண்ணிக்கை சுமார் 350 ரூபாயாக இருக்க வாய்ப்புள்ளது. நாம் எப்படியும் கடனில் சிக்கித் தவிக்கும் ஒரு நாடு என்பதால், அரசாங்கம் ஒரு கிலோ நெல் உற்பத்தி செய்ய ரூ. 500 செலவிட்டாலும், அது மக்களுக்கு எந்தப் பயனையும் அளிக்காது. அரசாங்கம் நிலைமையைப் புரிந்துகொண்டு நெல்லுக்கான உத்தரவாத விலை தொடர்பாக விரைவில் நிவாரணம் வழங்குவதே சிறப்பான விடயமாகும். ■

23 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## சத்தம் இல்லாத....

இதுக்கு எல்லாம் மேலால என்டை மனிசி புலுமைச் சிலந்தி expert, " இங்கயப்பா சிலந்தி சத்தம் போடுது" எண்டு என்னை அடிக்கடி எழுப்பிறது பயத்திலயா இல்லை அது உண்மையா சத்தம் போடிறது கேக்கிறதா எண்டு தெரியாது.

எங்கடை சனம் இதில expert ஆகித் தான் பிறகு கோட்டைக்க செல் குத்திக் கேக்கிற சத்தத்தில alert ஆகி சைரன் போட்டுச் சனத்தைக் காப்பாத்தினவை. பொம்மர் சுத்த வாற சத்தத்துக்கு எந்தக் camp க்கு அடி விழும் எண்டு தெரியும், அதுகும் இந்தா குத்திறான், இந்தா போட்டிட்டான் எண்டு கண்டுபிடிச்சு வெடிக்கமுதலே பங்கருக்க போய் safe ஆ இருந்து, சரியா நேரம் பாத்து அவன் போகவிட்டு எழும்பி வாறனாங்கள். அம்மாமார், எத்தினைமணிக்கு எவ்வளவு தூரத்திலேம் துவக்குச் சூடு கேட்டால் ரெண்டாவது சூட்டுக்கே எழும்பி இருந்துடுவினம். இப்பிடி கதைக்கிறதைக் கேட்டு,குண்டுச் சத்தத்தைக் கேட்டு,வாகனச் சத்தத்தைக் கேட்டு,பிள்ளை பிடிக்கவாறவனோட சத்தம் போட்டு சண்டை பிடிச்சு எண்டு சண்டைக்கால தப்பினது சத்தத்தால தான்.

சத்தத்துக்குள்ள சத்தமா வாழ்ந்திட்டு இப்ப என்னெண்டா வீட்டுக்குள்ளயே கூப்பிடிற சத்தம் கேக்காம, calling bell அடிக்கிறது உணராம, மழை பெய்யிறது தெரியாம, இருட்டினதும் விடிஞ்சதும் அறியாம சத்தமே இல்லாமல் இருக்கிறம். அக்கம் பக்கத்தில வீட்டிலயோ இல்லாட்டி ரோட்டிலயோ ஏதாவது சத்தம் கேட்டா இங்க டபைாவ ழகக பண்ணிப் போட்டுப் படுத்திடுறம். அது பயமா இல்லை சுய நலமா எண்டு தெரியேல்லை.

இந்தச் சத்தம் இல்லாத தனிமை நெச்சும் பாக்கேலாத கொடுமை. ■

21 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## பகுத்தறிவு என்பது தனியே....

அந்த ரத்னகிரி போன்ற சிவன் இப்போது இல்லையோ என்று கேட்கின்றார். இலங்கை முள்ளிவாய்க்காலிலே மொத்தமாய் உயிர்கள் பறிக்கப்பட்ட போதும் இதேபோன்ற கேள்வியே பலர் மனதுள் கேட்கப்பட்ட கேள்வியானது. இல்லையோ என்னும் அச்சம் தோன்றும் போதே இருக்கிறதா என்ற கேள்வியும் எம்மத்தியில எழுகின்றது.

*வெண்ணெயுற்று நெய்தேட*
*வேண்டுமா தீபமுற்று*
*நண்ணு கனறேட னன்றாமோ -*
*என்மனத்தை*
*நாடிச் சிவனிருக்க நாடாமனூர்தோறும்*
*தேடித் திரிவதென்ன செப்பு?*

ஏ, உள்ளமே உனக்கென்ன பேதைமை? வெண்ணெய் கையிலிருக்கும் போது நெய்யைத் தேட வேண்டிய அவசியமென்ன? விளக்கு இருக்கும்போது அனலைத் தேடிப் பிடிக் முனைவது சரியா? என்மனதை நாடிச் சிவன் இருக்கும்போது அவனை அகத்துள் பார்க்காமல் ஊரூராய்ச் சென்று கோயிலுக்குள் சென்று பார்ப்பதும் ஏன்? அதற்குக் காரணம் கூறு எனத் தன் பாடலில் சிந்திப்பதாய் வரிகள் தந்திருக்கின்றார். உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம் எனத் திருமூலர் கூறிய வரிகள் இங்கு தென்படுகின்றன. ஒருவன் பார்க்கும் பார்வையில் உண்மைத் தன்மையைத் தேடும்போது சமூகத்திடையே அவன் பற்றிய நோக்கு பலர் பார்வைக்குக் கேள்விக்குரியாகத் தென்படும். ஆனால், மனத்துக்கு ஒவ்வாமல், இருக்குமோ இல்லையோ, சரியோ தவறோ என்னும் ஆராய்ச்சியில் ஈடுபடாது, எதுவாகவாவது இருக்கட்டும் எல்லோரும் ஏற்றுக் கொள்கின்றார்களே! அப்படி ஏற்றுக் கொண்டாலேயே பலர் பார்வைக்கு நாம் நல்லவர்களாகத் தெரிவோம். பேரும் புகழும் எமக்குக் கிட்டும் என தப்பான ஒருவிடயத்திற்குத் துணைப்போவது மனிதனாக ஆறறிவு படைத்தமைக்குத் துரோகம் செய்வதாக முடியும். எதிர்காலச் சந்ததியினரையும் தப்பான வழிக்கு இட்டுச் செல்வதாக அமையும். மூடநம்பிக்கைகள் மலிவடைந்து மனிதநேயப்பண்புகளும் மழுங்கடிக்கப்படும்.

எனவே பகுத்தறிவு என்பது தனியே கடவுட்கோட்பாட்டை முறியடிப்பதல்ல. மனிதன்வாழும் பண்புகளின் நடத்தைகளின் தன்மை பற்றியும் ஆராய்வது என்பதில் மனம்பதிக்கவேண்டும். ■

05 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## சமூக வலைத்தளமும்....

எத்தனையோ இடர்பாடுகளிற்கு சமூக வலைத்தளங்களின் மூலம் சடுதியான உதவிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இளையவர்கள் முதல் பெரியவர்கள் வரை பல தரப்பினரையும் தொடர்பு கொள்ளும் வெளியாக சமூக வலைதளங்கள் மாறியிருப்பதால், இதை சாதகமாக பயன்படுத்தி பல வெற்றிகளை காண முடியும்.

தனிநபர்கள், சிறு நிறுவனங்கள் மட்டுமல்ல, இப்போது பல கார்ப்பரேட் நிறுவனங்களும், தொழில் முனைவோர்களும் தங்களுக்கான வர்த்தகத்தை சமூக தளங்களுக்கு மாற்றி இருக்கிறார்கள். சமூக வலைதளங்களை பயன்படுத்து பவர்கள் சராசரியாக ஒரு நாளில் இரண்டு மணி நேரமாவது இதற்கு ஒதுக்குகின்றனர் என்பதால் , இதில் வர்த்தகம் செய்யும் வாய்ப்புகளை பார்க்கலாம். வணிக நிறுவனங்கள், சமூக வலைதளங்கள் மூலம் பொருட்களை விளம்பரம் செய்து வாடிக்கையாளர்களின் கருத்துக்களை நேரடியாக அறிந்து கொள்ள முயல்கிறது. இதனால் வணிக நிறுவனங்களின் வளர்ச்சிக்குச் சமூக வலைதளங்களின் பங்கு இன்றியமையாததாகிறது.

ஆக, நாம் எப்போதுமே ஓர் நுகர்வோராக மட்டுமே இருந்து சமூகவலைத்தளத்தை பயன்படுத்திக்கொண்டிராமல் , அதை நமக்கு சாதகமாக நமக்கு பொருளீட்டும் வகையிலோ அல்லது நமக்கான தேடல்களை கற்றுக் கொடுக்கும் கருவியாகவோ பயன்படுத்திக் கொள்வது நமது நேரத்தை பாதுகாத்து நம்மை மென்மேலும் வளர்ச்சி அடையச் செய்யும் என்பதே நிஜம் ! ■



# 24 வது ஆண்டு நினைவு பூக்கள்

**செல்வி கஜனி தேவராஜா**
**(பிறேமன், ஜெர்மனி)**
**மலர்வு:12.05.1988**
**பிரிவு 16.03.2001**

எங்கள் அன்புச் செல்லம்
கஜனி அம்மா
ஆண்டுகள் இருபத்தி நான்கு
ஆனாலும்
உன்முகம் இன்றும்

எம் நெஞ்சில் நிழலாடுதே
காலம் கரையலாம்
உன் நினைவுகள்
எம் உயிர் உள்ளவரை
எம்மோடு வாழும்.

என்றும் உன் நினைவோடு அம்மா, அப்பா, அக்கா, அத்தான்
எஸ். தேவராஜா (இங்கிலாந்து)

சர்வதேச பெண்கள் தின வாழ்த்துகள் (பங்குனி 08)



**இயக்குனர் சிபோ சிவகுமாரன் அவர்களின் புதிய படத்திற்கான பூசை**

கம் ஸ்ரீ காமாட்சி அம்மன் ஆலயகுரு மதிப்புக்குரிய சிவஸ்ரீ ஆறுமுக பாஸ்கரகுருக்கள் அவர்களின் வாழ்க்கை வரலாறு படமாக்கப்படுகின்றது. முதல் நாள் ஆரம்ப நிகழ்வு 16-02-2025 ஞாயிற்றுக்கிழமை கம் காமாட்சி அம்மன் கோயிலில் மிகவும் சிறப்பாக இடம் பெற்றது. சிபோ சிவகுமாரன் அவர்களின் இயக்கத்திலும்,திரு.சிவகுமாரன் அவர்களின் ஒளிப்பதிவிலும் இத்திரைப்படம் வளர உள்ளது. நம்மவர்கள் முயற்சி வெற்றிபெற வெற்றிமணியின் வாழ்த்துக்கள்.

# அநுர அரசின் கன்னி பட்ஜெட்டும் வட, கிழக்கு மக்களின் எதிர்பார்ப்பும்

15 ஆம் பக்கத் தொடர்ச்சி...

அதேவேளை,யாழ்.நூலகத்துக்கு 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல்,மீள் குடியேற்றத்துக்கு என 1500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இங்கு வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் நிதி அல்லது வேலைத்திட்டம் என்பது ஒரு நாட்டின் அரசாங்கம் என்ற அடிப்படையில் முழு நாட்டுக்கும் ஒதுக்கப்படும் அல்லது அந்த அரசு முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களின் ஒரு பகுதியாகவே பார்க்க முடியும்.ஆனால்,விஷேட தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் வலிகளையும் சுமந்துகொண்டு வாழும் அந்த மக்களுக்கு புதிய அரசாங்கம் எதனை வரவுசெலவு திட்டத்தில் செய்திருக்கிறது என்று பார்த்தால் முன்னைய ஆட்சியாளர்களின் நிகழ்ச்சி நிரலை பின்பற்றுவதாகவே அமைந்திருக்கிறது.

இங்கு அபிவிருத்திக்கான நிதி மாத்திரமே ஒதுக்கப்பட்டிருக்கிறதே தவிர,வடக்கு கிழக்கில் யுத்தத்தின் வடுக்களாக இன்றும் இன்னல்களை எதிர்கொண்டுவாழும் மக்களுக்கு இந்த அரசும் எந்த அக்கறையையும் செலுத்தவில்லை என்பது பெரும் ஏமாற்றமாக இருந்தாலும் தமிழர்களுக்கு இது பழகிப்போன ஒரு விடயமே.



வடக்குகிழக்கில் அபிவிருத்திக்கு அப்பால் பல அடிப்படை விடயங்கள் அவசியமானதாகவும் அத்தியாவசியமானதாகவும் இருக்கிறது.இறுதிக்கட்ட யுத்தம் நடந்த வன்னிப்பகுதியில் பல ஆயிரம் பேர் இன்றும் குடிசைகளிலும் கொட்டில்களிலும் வாழ்ந்துவருகிறார்கள்.வேலைவாய்ப்புகள் இல்லாததால் பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள்.அதேபோல், முன்னாள் போராளிகள் மற்றும் போரில் அவயவங்களை இழந்த பலர் சொல்லொணா துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள்.பெண்களை தலைமைத்துவமாக கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இன்றும் வடக்குகிழக்கில் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் காலம் கடத்தப்பட்டு கொண்டிருந்தாலும், அல்லது விருப்பமில்லாவிட்டாலும் மேற்படி விடயங்கள் தொடர்பில் மாற்றத்தை விரும்பும் அரசாங்கம் என்ற அடிப்படையில் தேசிய மக்கள் சக்தி கவனம் செலுத்துவது அவசியமாகும்.

'இந்த நாட்டில் இன முரண்பாடுகள் இனி இல்லை. மதம், இனம், பாலினம் என பிரிவடையும் காரணிகள் இல்லை. நாம் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்புவோம், ஒருவருக்கொருவர் மரியாதையுடன் இருப்போம்' என்று அனுரகுமார திஸாநாயக்க வரவு செலவு திட்ட உரையின் இறுதியில் அறைகூவல் விடுத்திருந்தார்.அவருடைய இந்த வாய்ப்பேச்சு இந்த நாட்டில் நடைமுறைக்கு வரவேண்டுமானால் வடக்கு கிழக்கில் வாழ்கின்ற மக்களுடைய அத்தியாவசிய பிரச்சினைகளாக நாம் மேலே சுட்டிக்காட்டிய விடயங்களிலாவது, ஆக குறைந்தளவிலேனும் அரசாங்கம் மனமுவந்து செய்ய முன்வரவேண்டும். அவ்வாறான ஒரு சமிக்ஞையை கூட செய்ய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்வராவிட்டால் இந்த அரசாங்கமும் ஒரு தோல்வியடைந்த அரசாங்கமாகவே வரலாற்று ஏட்டில் பதியப்படும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. ஆகவே அனுரகுமார திஸாநாயக்க வாய்வழியாக ஆசைப்படும் இலக்கை அடையவேண்டுமாகவிருந்தால் தமிழ் மக்களுடைய மனங்களை வெல்வதற்கான வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பது காலத்தின் தேவையாகும் என்பதை விட கடந் தகால வரலாறுகள் அவர் முன் சிறந்த பாடங்களாக இருக்கின்றன என்பதை அழுத்தம் திருத்தமாக இங்கு கூறி நிற்கிறோம்.

11 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## என்னிடம் அடிக்கடி

ஆனால் அதைச் சமைக்கும் பொழுது எண்ணெய் இல்லாமல் சமைப்பது நல்லது. பெரும்பாலான மாமிசங்களில் இயற்கையாகவே எண்ணெய் இருக்கும் அதை வைத்துக் கொண்டு மட்டுமே சமைப்பது ஆரோக்கியமானதாக இருக்கும்.

நான்கு மணி அளவில் ஒரு கப் பழம் தைவான் நாட்டில் பழங்கள் மிக அருமையாகக் கிடைக்கும். அதனால் அந்தந்த பருவத்திற்கு வரும் பழங்களைச் சுவைத்துக் கொள்வேன். பழங்களோடு சேர்த்து உலர் பருப்பு வகைகள் பாதாம், பிஸ்தா, வால்நட், உலர் திராட்சை (ஒவ்வொன்றும் 4) எடுத்துக் கொள்வேன்.

6.30- 7.30 இரவு சாப்பாடு. இரவு பெரும்பாலும் ஏதாவது சுண்டல் வகைஃ சோயா அதனுடன் ஓட்ஸ் நான்கைந்து தேக்கரண்டி. வெள்ளரிக்காய் அல்லது கேரட்.

நான் மெனோபாஸை நெருங்கிக் கொண்டிருப்பதால் ஈஸ்ட்ரோஜன் அதிகமான உணவுகளை எடுத்துக்கொள்வதில் இப்போது கவனம் செலுத்துகிறேன். தயிர், மோர் நிறைய சேர்த்துக் கொள்வேன். ஊழககநநஇ வநய குடிப்பதில்லை.

பெரும்பாலும் இந்த உணவு முறையே நான் பின்பற்றுகிறேன். சனி, ஞாயிறு இவற்றிலிருந்து விலகுவதுண்டு. அதுவும் ஏதாவது ஒரு வேளை மட்டும். இதில், மூன்று வேளை சாப்பாட்டிலும் பெரும்பாலும் எண்ணையோ வெண்ணெய்யோ சேர்த்துக் கொள்வதில்லை. பருப்புச் சாதம் செய்யும்போது கொஞ்சம் நெய் சேர்த்துக்கொள்வேன். சில காய்களில் தாளிப்புக்காகச் சொட்டு எண்ணெய் சேர்த்துக் கொள்வதோடு சரி . இதற்கு முக்கியக் காரணம் எனக்குச் சாக்லேட், ஐஸ்கிரீம், கேக், *cheese* போன்றவை மீது அதீதப் பிரியம். அதனால் சாயங்காலம் இரவு சாப்பாட்டிற்கு முன்பு ஏதாவது ஒன்றைச் சாப்பிட்டு விடுவேன். அதை ஈடுகட்டும் வகையில் சமையலில் அதிகம் கொழுப்புச்சத்தைச் சேர்த்துக் கொள்வதில்லை. (உலர் பருப்புகள், *cheese* எல்லாம் பணக்காரர்கள் உணவு என்று சிலர் தர்க்கம் செய்யலாம். உண்மையில் அவற்றிற்கான செலவு, நீங்கள் மருத்துவமனைக்குச் செலவிடும் பணத்தை விட குறைவு என்பதை யோசித்துப் பாருங்கள். முடிந்த வரையிலும் பலதரப்பட்ட கலவையான ஆரோக்கியமான உணவுகளை சேர்த்துக் கொள்வது நல்லது அது நமக்கான முதலீடும் கூட.)

உணவைப் பொறுத்தவரையில் இதைச் சாப்பிடக்கூடாது, அதை முற்றிலும் தவிர்க்க வேண்டும், மைதா சாப்பிடக்கூடாது, பேலியோ டயட், கீட்டோட டயட் போன்றவற்றில் எனக்குச் சுத்தமாக நம்பிக்கைக் கிடையாது. உடல் என்பது நிலத்தின் நீட்சி. நாம் எந்த இடத்தில் வசிக்கிறோமோ வாழ்கிறோமோ அந்த இடத்தில் விளையும் எல்லாப் பொருட்களும் நாம் உட்கொள்ளலாம். மாவுச் சத்து மிக்க உணவின் மீது இன்று ஓர் ஒவ்வாமை இருக்கிறது. அது தேவையில்லை என்பது என்னுடைய தனிப்பட்ட கருத்து. சித்திரை இதழில் தொடரும்.அதுவரை மேல் கூறியவற்றை செய்து பாருங்கள்.

27 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## தலைவாழை இலை

கொண்டிருந்த பிள்ளைகளைத் தூரத்தில் ஒளிந்து இருந்து வநடந டநளெ ஆல் படம் பிடித்தேன். பால்யம் ஒரு தடவை குளிர்வித்துச் சென்றது.

**முகபாவனைகள**

அவனது பட்டத்தை அண்ணன் வானத்தில் ஏற்றிக் கொடுத்ததும் விண்வெளிக்கு ராக்கெட் விட்ட ஆனந் தம் அவனுக்கு. தரையில் கால்கள் படாமல் அந்தரத்தில் பறந்தான்.

பட்டம் விட ஆயத்தமானதில் இருந்து அது பறந்து கொண்டிருக்கும் வரை அவனிடம் எத்தனைவகை முகபாவனைகள்.

**புத்திசாலிக் கிளி!**

இப்பொழுது பச்சைக்கிளிகளும் புத்திசாலிகளாகத் தான் இருக்கின்றன. தோட்டக்காரனிடம் மாட்டிக் கொள்ளாமல் ஒரு பயற்றங்காயைப் பிடுங்கிக் கால்களில் பற்றிக்கொண்டு வந்து அடுத்த வீட்டுத் தென்னோலையில் இருந்து ரசித்து ருசித்தது.

கம் காமாட்சி அம்பாள் ஆலய குருவின் நல்லாசியுடன்

வெற்றிமணி ஆசிரியரின் தலைமையில்

ஐரோப்பிய தமிழ் வானொலி அதிபர், அகரம், அகரதீபம்
சஞ்சிகைகளின் பிரதம ஆசிரியர் திரு **த.இரவீந்திரன்** அவர்களின்

# மணி விழா அழைப்பிதழ்

**காலம் : 29.03.2025 நேரம் : ஆரம்பம் 15:00 நிறைவு 22:00**
**இடம் : கம் காமாட்சி அம்பாள் கலாச்சார மண்டபம் Siegenbeck Straße 4-5 59071 Hamm**

## நிகழ்வுகள்

வணக்கநிகழ்வு

வரவேற்புரை

ஆசியுரை : கம் காமாக்ஷி அம்பாள் ஆலய ஆதீனகர்த்தா இரேவணசித்த
**சிவஸ்ரீ. ஆறுமுக பாஸ்கரக் குருக்கள்**

தலைமையுரை : **மு.க.சு. சிவகுமாரன்** பிரதம ஆசிரியர் வெற்றிமணி

சிறப்புரை : **சு.பாக்கியநாதன்** பிரதம ஆசிரியர், கலைவிளக்கு பத்திரிகை

வாழ்த்துரைகள் : **ஊடக நண்பர்கள்**

## கலை நிகழ்ச்சிகள்

நன்றியுரை

**அழைப்பின் மகிழ்வில்**

வெற்றிமணி தமிழர் அரங்கம்



# பெண்மை விலங்கில்





**கவிதா லட்சுமி (நோர்வே)**

என்னிடம் பெண்மையில்லை
மன்னித்து விடுங்கள்!

வளையல் குலுங்க
கொலுசொலியுடன்
வளைய வரும் பெண்மை
என்னிடம் இல்லை!

நாற்சுவரில் தூசு தட்டி
நல்ல பெயர் வாங்க முடியவில்லை
என்னால்.

கண்மூடி நின்று
கணவனுக்கும் குழந்தைக்கும் மட்டுமாய்
பிரார்த்திப்பதில் விருப்பில்லை எனக்கு

உயிர்களனைத்தும் நானென்ற
உயர்ச் சிந்தனை மரபு
எனது!

சமூகத்தின்
வக்கிர வார்த்தைகளை வெல்லும்
மொழியும் வழியும்
தெரிந்தவள் நான்.

மௌனித்திருப்பதோ
பிறர் கருத்துகளின் பின்
ஒளிந்துகொள்வதோ
எனது தோரணை இல்லை

தொங்கப் போடும் தாலியில்
எனது கண்ணியத்தையும்
பெண்மையையும் நிரூபிப்பதில்
உடன்பாடில்லை எனக்கு

நிமிர்ந்தே நடக்கிறேன்
எந்த சமரசத்தையும்
கடந்து போக முடிகிறது என்னால்

ஆணையும் சக மனிதனாகத்தான்
பார்க்க முடிகிறது என்றால்
பார்த்துக்கொள்ளுங்கள்.

என் பயணத்தின்
தூரத்தை என் கால்களே
தீர்மானிக்கின்றன.
பிறப்புறுப்பல்ல!

தாய்மை,
இயற்கையின் வடிவம்
எல்லா உயிர்க்கும்
ஒன்று போலே நகும்
எனும் மனம் எனது.

வெட்கத்தின் வரைமுறை
புரியவில்லை எனக்கு.

அடக்கம் என்பதற்கு
எனது அகராதியில்
சுயகருத்துண்டு

பொறுமை என்பதன் அளவுகோல்
அவர்களதும் எனதும்
ஒரே அளவில் இல்லை

பொருந்தா மரபுகளை
முறித்துக் கொண்டு
மனுசியாகிவிடுகிறது
சுயம்!

நீங்கள் நினைக்கும் பெண்மை
என்னிடம் இல்லை!

இருக்கப்போவதுமில்லை!

மன்னித்து விடுங்கள்!

# சின்னத்திரைக்கு வந்த வரலட்சுமி



நடிகைகள் சிலர் படத்தில் நடித்துக்கொண்டிருக்கும் போதே சின்னத்திரையில் ஒரு சில நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வது வழக்கம்.

ஆனால், சிலர் ரியாலிட்டி ஷோ நிகழ்ச்சிகளில் பங்கேற்பதன் மூலம் வெள்ளித்திரையில் கிடைத்த அறிமுகத்தை விட சின்னத்திரையில் அதிக மக்களின் பேரன்பை பெறுகின்றனர். நடிகைகள் சினேகா, சங்கீதா, குஷ்பூ உள்ளிட்டோர் மக்கள் மனதில் தனக்கென்று ஒரு இடத்தை பிடித்துள்ளனர். தற்போது அந்த வரிசையில் நடிகை வரலட்சுமியும் இடம்பிடிக்கவுள்ளார்.

ஜீ தமிழில் ஒளிபரப்பாக இருக்கும் டான்ஸ் ஜோடிடான்ஸ் நிகழ்ச்சியில் நடிகை வரலட்சுமி நடுவராக பங்கேற்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.



# மீண்டும் பாட்ஷா

1995ம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு வெளியான படம் ரஜினியின் 'பாட்ஷா'. சுரேஷ் கிருஷ்ணா இயக்கத்தில் உருவான இந்தப் படத்தில் நக்மா, ரகுவரன், விஜயகுமார், தேவன், ஜனகராஜ் உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர்.

கிட்டத்தட்ட ஒரு ஆண்டுக்கும் மேலாக திரையில் ஓடி பிளாக்பஸ்டர் வெற்றியை பெற்ற படம் 'பாட்ஷா'. இந்த படம் 2017-ம் ஆண்டு மீண்டும் திரையிடப்பட்டிருந்தது.

ரகுவரன் ஏற்று நடித்திருந்த மார்க் ஆண்டனி கதாபாத்திரம் இன்று ரசிகர்கள் மாஸ் வில்லனாக ரசிகர்கள் மனதில் இடம்பிடித்துள்ளது. இதற்கிடையில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட இயக்குநர் சுரேஷ் கிருஷ்ணா, பாட்ஷா படம் 30 ஆண்டுகள் நிறைவு அடைந்ததையொட்டி படத்தின் ரீ-ரிலீஸ் குறித்து பேசினார்.

"படம் 4கே டிஜிட்டல் வடிவத்தில், டால்பி அட்மாஸ் சவுண்ட் தொழில்நுட்பத்துடன் உருவாகி வருகிறது. வருகிற ஏப்ரல் மாதம் பாட்ஷா படம் ரீ-ரிலீஸ் செய்யப்படும்ஷ" என்று தெரிவித்துள்ளார்.







# சூரியின் 'மாமன்' திரைப்படத்தின் புதிய போஸ்டர்

பிரசாந்த் பாண்டிராஜ் இயக்கத்தில் லார்க் ஸ்டூடியோஸ் தயாரிப்பில் மாமன் எனும் புதிய திரைப்படத்தில் நடிகர் சூரி நடித்து வருகிறார்.

நடிகை ஐஸ்வர்ய லட்சுமி இப் படத்தில் சூரிக்கு ஜோடியாக நடிக்கிறார்.

குடும்ப உறவுகளை மையமாகக் கொண்டு இப் படம் உருவாகவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்நிலையில் மாமன் திரைப்படத்தின் புதிய போஸ்டர் வெளியாகியுள்ளது.


Pirruntha Imex
Lebensmittel ,Obst;Gemüse Aus Asien & Afrika



Tel:07031 678290
mob:0172 730 7425
Wilhelmstr.24 - 71034 Böblimgen

PIRRUNTHA SILKS
Exclusive Indian Clothing & Jewelry
Ludwig str.87a
70197
Stuttgart
பொங்கல் வாழ்த்துக்கள்
தரம்மிக்க தங்க நகைகள்
நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில்
அமைந்த சேலைகள்
மற்றும் இமிற்றேசன்
நகைகள் அனைத்திற்கும்
நீண்ட கால நம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்



Tel: 0711 615 8976/ 0170 334 4059


Jasmine Silk House
ஆடைகளின் ராணி
பட்டு, பாரம்பரியம்,
யஸ்மின் சில்க்கவுஸ்
இவை மூன்றையும்
பிரிக்கவே முடியாது
" என்றும் புதியது
ஆடைகள் என்றும் புதியது ! "
Happy Women's Day
8th MARCH
Tel: 02102 844744
HP: 0173 1937 325
'Jasmine Silk House" Fester Str.50- 40882 Ratingen


TRUST TRAVELS
Reisebüro
இலங்கை, இந்தியா மற்றும் அனைத்து நாடுகளிற்குமான
பயணச்சீட்டுகள்,
வீசாக்கள் அனைத்தையும்
குறைந்த செலவில் விரைவாகப் பெற்றுக்கொள்ள
நாடுங்கள்...
TRUST TRAVELS
A9 Road,Kilinochchi,
Srilanka.
+94 776 668 381
trusttravelsffm@gmail.com
TRUST TRAVELS
Mosel str 33
60329 Frankfurt am main
+49 176 45656520
ஜெ.வினோத்குமார்
Lufthansa
SriLankan
IndiGo
Emirates


மருதம் தங்ககம்
HOTEL MARUTHAM
A9 வீதி, கிளிநொச்சி
நகரின் மையத்தில்,
அனைத்து வசதிகளுடன்
புதிய தங்குமிடம்.
+94 212 286 677
+94 776 665 685
Non smoking rooms
Parking
Family rooms
24 Hours front desk
Lift
AC/NON AC
ROOMS
A/C Rooms
Intercom system
Van Hire services
Attached bathrooms
TV


KANTHAN
JEWELRY MARKT
காந்தன் தங்க நகை மாடம்
தரமான தங்க நகைகள்
புத்தம் புது டிசைன்களில்
எம்மிடம் கிடைக்கும்.
யேர்மனி டோட்முண்ட் நகரில்
பொன் ஒளி வீசும்
காந்தன்
தங்க நகை
மாடம்
RHEINISCHE STR. 72 / 44137 / DORTMUND / GERMANY
0172 8684 203 / 0231 5898 7828 /


Lido a Casa
...online bestellen auf
www.lidoacasa-ms.de


Jaffna Super markt
Lebensmittel aus Asien, Afrika,China und Orient
WELCOME IM Jaffna SUPER.MARKT
எம்மிடம் நம்பி வாங்கோ!...
சந்தோசமாகப் போங்கோ!!...
Tel:0179 2310 560
Wolbecker Str.16a 48155 Münster (Eingang von Bremer Platz neben Parkhaus Ausgänge)